RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 12 ஏப்ரல் 2024 இதழ்:- 46

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## தமிழ் வேட்பாளரைக் களமிறக்கும் யோசனைகளின் பின்னால் ராஜபக்ஷாக்கள்?

### பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமற்றது சுமந்திரன், சிவஞானம் தெரிவிப்பு! 3ம்பக்கம்





Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com




ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க eelanadu.ca

### உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் இடம் பிடித்துள்ள 5 தமிழர்கள்

உலகளவில் புகழ் பெற்ற பத்திரிகை நிறுவனமான ஃபோர்ப்ஸ் வெளியிட்டுள்ள பணக்காரர்கள் பட்டியலில் 5 தமிழர்கள் இடம் பிடித்துள்ளனர். போர்ப்ஸ் 2024ஆம் ஆண்டுக்கான பணக்காரர்கள் (6ம் பக்கம் பார்க்க)

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters

## புலிகளிடம் இருந்து நாட்டைப் பாதுகாத்த இராணுவத்தைப் பாதுகாக்கும் அரசை நிறுவுவோம் - சஜித்தின் இனவெறிப் பேச்சு!

நாட்டைப் பாதுகாத்த இராணுவத்தைப் பாதுகாக்கும் அரசாங்கத்தை நிறுவுவோம் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் இராணுவ வீரர்களது மாத்தளை மாவட்ட மாநாடு கடந்த 06 ஏப்ரல் 2024 சனிக்கிழமை மாத்தளையில் இடம் பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் 76 வருட கால ஜன நாயக வரலாற்றில் நாட்டிற்காக(5ம் பக்கம் பார்க்க)



BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-6110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487


THINKING OF
SELLING OR BUYING A HOME?
www.AgentSiva.com
Your neighborhood sales representatives
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
B.Comm.
Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
21 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Lawrence /Morningside
Scarborough $447,000
Bedrooms: 3 Washrooms: 2
Large Open Balcony Amazing View
Fanshawepark / Highbury Ave
London $720,000
Bedrooms: 3+2 Washrooms: 2
bungalow with an inground pool
Kennedy Rd & Bovaild Dr. E
Brampton $1,100,000
Bedrooms: 4+1 Washrooms: 3
Recently renovated
Dixie Rd & Bovaird Dr E
LEGAL BASEMENT
Brampton $1,349,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Fully finished legal basement
Pine Ridge Dr & Farley Dr
Guelph $1,199,900
Bedrooms: 3+1 Washrooms: 4
finished basement
Meadowvale / 401
Scarborough $1,898,000
Bedrooms: 4+3 Washrooms: 5
fully fin.basement with sep entrance
Tenth Line & 19th Line
Stouffville $1,699,000
Bedrooms: 4+3 Washrooms:7
Newly Built under a year old home
Leslie St & Green Ln
East Gwillimbury $1,899,900
Bedrooms: 4 Washrooms: 4
Minutes to Transit & Go, Hwy 404
Bur Oaks / Markham Rd.
Markham $539,900
Bedrooms: 1 Washrooms: 1
Newer Modern Condo Building
Annland & Liverpool
Pickering $849,900
Bedrooms: 3 Washrooms: 2
This newly renovated home
Steels Ave/Mississauga Rd
FOR LEASE
Brampton $2,250
Bedrooms: 3 Washrooms: 2
Brand new legal basement
Church & Rossland
FOR LEASE
Ajax $1,600
Bedrooms: 1 Washrooms: 1
Open Concept Living & Kitchen
Grandview St / Conlin Rd
FOR LEASE
Oshawa $3,500
Bedrooms: 4 Washrooms: 3
Freshly Renovated Home In Taunton
Mccowan And Ellesmere
FOR LEASE
Scarborough $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Close to Transit, STC, Library
Looking for more house?
www.AgentSiva.com
WILL BRING THE BEST RESULTS!
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**

**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**


# தமிழ் வேட்பாளரைக் களமிறக்கும் யோசனைகளின் பின்னால் ராஜபக்ஷாக்கள்?

# பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமற்றது சுமந்திரன், சிவஞானம் தெரிவிப்பு!

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தரப்பு வேட்பாளரை களமிறக்க வேண்டுமென்ற கோரிக்கைகளின் பின்னால் ராஜபக்ஷக்கள் இருக்கின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சாளரான பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். இவ்வாறான கோரிக்கைகள் ஊடாக தோல்வியுற்றுள்ள ராஜபக்ஷக்கள் மீண்டும் உயிர் பெறுவார்கள் என்றும் சுமந்திரன் கூறியுள்ளார்.

தொலைக்காட்சி அரசியல் நிகழ்ச்சியொன்றில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். தமிழ் வேட்பாளர் என கூறுவதை அடிப்படையாகக் கொண்டு தீவிரவாத, இனவாத சிங்கள சக்திகள் ஒன்று சேர்ந்து அவர்களின் கரங்களை பலப்படுத்தும் சம்பவம் நிகழலாம். முன்னர் இவ்வாறான யுக்திகளை கையாண்டு தமிழ் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளனர். அப்படி போட்டியிட்ட தமிழ் வேட்பாளர் பாராளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிட்ட குருநாகல் மாவட்டத்திலும் போட்டியிட்டார் என்றும் சுமந்திரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமற்றது என தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானமும் தெரிவித்தார்.

யாழ் கல்வியங்காட்டிலுள்ள தனது அலுவலகத்தில் 09 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது.. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த வேண்டும் என்பது தொடர்பாக பரவலாக பேசப் பட்டு வருகிறது.

இந்த விடயம் சம்பந்தமாக எங்களுடைய கட்சி ஒரு கட்சியாக இன்னமும் கலந்துரையாடி ஒரு முடிவிற்கு வரவில்லை. ஆனால் தனிப்பட்ட வகையில் என்னைப் பொறுத்தவரையில் இது எவ்வாறாயினும் நடைமுறைச் சாத்தியமாகாது. பொது வேட்பாளரை தேடிப் பிடிபதற்குள்ளேயே முரண்பாடு பல வந்து சேரும். ஏற்கனவே நிலைமைகள் அப்படித் தான் இருக்கிறது. ஆகவே தனிப்பட்ட வகையில் என்னுடைய கருத்து என்னவெனில் பேரம் பேச வேண்டிய சூழ்நிலைக்கு ஒற்றுமையாக பலமாக நாங்கள் இருக்க வேண்டும். அந்தப் பலத்தோடு நாங்கள் பேரம் பேசலாம். ஆனால் ஒரு பொது வேட்பாளர் என்றால் ஏனைய வேட்பாளர்களோடு நாங்கள் சமநிலையில் நிற்கிற பொழுது சில சமயங்களில் எங்களது பேரம் பேசும் பலம் குறைவாக இருக்கலாம். அல்லது அவர்கள் எங்களோடு பேரம் பேசாமலும் போகலாம்.

இவ்வாறான சூழல்களும் இருப்பதாலே என்னுடைய தனிப்பட்ட கருத்து இது ஒரு பொது வேட்பாளரை தெரிவு செய்வதிலேயே முடங்கி விடும். அல்லது சாத்தியமற்றதாக அமையும். அது பிரதேச வாதங்களுக்கு இடங் கொடு





க்கக் கூடிய வாய்ப்பாகவும் அமையும். வேட்பாளரை தெரிவு செய்வதிலேயே முடங்கி விடும். அல்லது சாத்தியமற்றதாக அமையும்.

பொது வேட்பளர் தெரிவிற்கு எந்த கட்சி என்ற விடயத்தில் பூச்சுக்களுக்கு இடங் கொடுக்க கூடும். ஆகவே எல்லா விடயத்திலேயும் பார்க்கிற பொழுது இது நடைமுறைச் சாத்திய மற்றது என்பதே என்னுடைய தனிப்பட்ட கருத்து. ஆனாலும் கட்சி இனி கலந்து பேசி முடிவிற்கு வரலாம். அதன் பிறகு அதனோடு நாங்கள் உடன்படுவதோ இல்லையா என்பதையும் தீர்மானிக்கலாம் என்றார்.

இவர்கள் இருவரது கருத்துத் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல அரசியல் ஆய்வாளர் ஒருவர் எமக்கு கருத்துத் தெரிவிக்கையில் சுமந்திரனின் கருத்துச் சரியானது. கடந்த கால வரலாற்றை திரும்பிப் பார்க்க வேண்டும். தமிழ்மக்களை வாக்களிக்காமல் தடுத்து ராஜபக்ஷாவைக் கொண்டு வந்து நடந்தது என்ன? இரண்டாவது தடவை ராஜபக்சாவின் மறைகரமாக இருந்து சிவாஜிலிங்கம் போட்டியிட்டார். ராஜபக்ச மீண்டும் வெற்றி பெற்றார்.

பௌத்த சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் முஸ்லிம் மக்கள் மீதான வெறுப்புணர்வை வளர்த்து தனிச் சிங்கள வாக்குகளால் கோத்தபாய மகத்தான வெற்றி பெற்று சாதனை படைத்தார். இன்று தென்னிலங்கையில் ரணில் சஜித், அனுர என மூன்று அணிகள் மோதுகின்றன. தமிழ்மக்களது வாக்குகள் வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்குகளாக விளங்கவுள்ளது. இது இவ்வாறிருக்க தேர்தல் நிலவரங்களை உன்னிப்பாக அவதானித்து வரும் ராஜபக்ஷாக்கள் தங்களது வேட்பாளரை நிறுத்தும் யோசனைகளை மறைமுகமாக வைத்துள்ளனர். இந்நிலையில் தான் தமிழ் மக்களின் உதிரிக் கட்சிகளை ஒன்றாக்கி தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயத்தை பேசு பொருளாக்கியுள்ளனர்.

இதில் விக்கினேஸ்வரன் எம்.பியை அவரது சம்பந்தி வாசுதேவநாணயக்கார மூலமும் சந்திரிகா காலத்தில் மகிந்தா மீன் பிடித்துறை அமைச்சராக இருந்த போது அவருக்குக் கீழ் பணியாற்றிய சுரேஷ் பிரேமச்சந்திரன் மூலமும் செல்வம் அடைக்கலநாதனது சகோதரர் கள்ளக் கடத்தல் வர்த்தகத்தில் கைது செய்யப்பட்டு அன்றைய பாதுகாப்பு செயலாளராக இருந்த கோத்தபாயா மூலம் விடுவிக்கப்பட்டவர் என்பதால் கோத்தபாய மூலமும் தமிழ் பொதுவேட்பாளர் கோசம் எழுப்பப்படுகின்றது.

இதனை பின் புலமாக வைத்துக் கொண்டு சிங்கள மக்கள் மத்தியில் தமிழின வெறுப்பைக் காட்டி ராஜபக்ஷாக்கள் மீண்டும் பதவியைக் கைப்பற்ற வாய்ப்புள்ளது. எனவே தான் சிவஞானம் அவர்கள் குறிப்பிடுவது போல நாம் பலமாக இருந்து கொண்டு தென்னிலங்கைக் கட்சிகளுடன் வெளிப்படையாகப் பேரம் பேச வேண்டும். அது தான் சாத்தியமான அரசியல் நகர்வாகும் என்றார்.

## தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவர் ஆர்.எம்.வீரப்பன் காலமானார்



எம்.ஜி.ஆர். கழகத்தின் நிறுவனரும், முன்னாள் அமைச்சருமான ஆர்.எம். வீரப்பன் தனது 97 ஆவது வயதில் 09 ஏப்ரல் 2024 காலமானார். உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த இவர், சென்னை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதாவின் அமைச்சரவையில் அமைச்சராக பதவி வகித்த ஆர்.எம்.வீரப்பன், பல சினிமா திரைப்படங்களையும் தயாரித்தவர் ஆவார். தமிழகத்தில் மூத்த திராவிட அரசியல் தலைவர்களில் ஆர்.எம். வீரப்பன் முக்கியமானவர்.

அதிமுகவில் இருந்தாலும், திமுக தலைவரான கருணாநிதி மற்றும் திமுகவைச் சேர்ந்த தலைவர்கள் உடனும் நட்பில் இருந்தவர் இவர். அதிமுகவில் இரு ந்து விலகிய பிறகு எம்ஜிஆர் கழகம் என்ற கட்சியைத் தொடங்கியுள்ளார். திரைத் துறையில் எம்ஜி ஆருக்கு வலதுகரமாக இருந்து சத்யா மூவிஸ் நிறுனத்தை தொடங்கி பல திரைப்படங்களை தயாரித்துள்ளார்.


### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**



**Balachandran Law Office**

**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# திருகோணமலை மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலய காணியில் புத்தர் சிலை திறப்பு! அரச நிர்வாகமும் துணை போவதாக குற்றச்சாட்டு



திருகோணமலை மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலய காணியில் சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை கடந்த 0 ஏப்ரல் 2024 வெள்ளிக்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது. திருகோணமலை சிவபுரி கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மடத்தடி பகுதியில் வீரகத்தி பிள்ளையார் ஆலயத்துக்கு சொந்தமான காணியில் கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்டு வந்த புத்தர் சிலை கடந்த வெள்ளிக்கிழமை மாலை அவசர அவசரமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அப்பகுதியில் வசிக்கும் சிறியளவிலான மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள். அப்பகுதியில் கடந்த 2019ஆம் ஆண்டு காலப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் தமிழ் மக்களுடைய எதிர்ப்பையும் மீறி புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டது. அவ்விடத்திலேயே தற்போது பாரிய கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது. இது தொடர்பாக அப்பிரதேச வாசிகள், இது போன்ற பௌத்த மயமாக்கலின் மூலம் தமிழர் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களுடைய காணிகள் தொடர்ச்சியாக அபகரிக்கப்பட்டு, சிங்களமயமாக்கப்பட்டு வருவதாகவும், சிறிய புத்தர் சிலை வைப்பதில் தொடங்கி அது விகாரையாக மாற்றப்பட்டு சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளும் வரையிலான செயற்பாடுகளை அரச அனுசரணையுடன் சிலர் செய்து வருவதாகவும், இதற்கு அதனுடன் சம்பந்தப்பட்ட அரச நிர்வாகமும் துணை போவதாகவும் தெரிவிக்கின்றனர்.

## முல்லைத்தீவிலும் வீதிப் பிள்ளையாரை ஆக்கிரமித்த புத்தர்



இதேவேளை முல்லைத்தீவு புல்மோட்டை வீதியோரத்தில் இருந்த பிள்ளையார் கோவிலில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. புல்மோட்டைமுல்லைத்தீவு வீதிகளின் சந்திப்பில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக முல்லைத்தீவு வீதியோரத்தில் இருந்த ஆலயத்தில் பிள்ளையார் சிலை மாத்திரம் இருந்துள்ளது. இந்த ஆலயத்தில் பொது மக்கள் வழிபட்டு வந்த நிலையில், தற்போது திடீரென குறித்த ஆலயத்தில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. தமிழர் பகுதிகளில் உள்ள சைவ வழிபாட்டுத் தலங்களை சிங்கள மயமாக்கும் வகையில் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக சமூக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க மடுமாதா திருச்சொருபம் 50 ஆண்டுகளுக்கு பின் யாழ் மாவட்டத்திற்கு ஊர்தி பவனியாக எடுத்து வரப்பட்டது. இதன் போது ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். மடுமாதாவின் முடி சூட்டுவிழாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடுமாதா திருச்சொருபம் மன்னார் மற்றும் யாழ் மறைமாவட்ட பங்குகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

இந் நிலையில் மன்னார் மறை மாவட்டத்திடமிருந்து யாழ் மறைமாவட்டத்திற்கு மடு மாதா திருச் சொருபம் கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்தில் வைக்கப்பட்டு யாழ் மறைமாவட்ட ஆயர் தலைமையில் விசேட திருப்பலி இடம்பெற்றது.




கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே! வணக்கம்!
அம்பாள் கோவில் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் இந்த வருடம் வருடாந்த மஹோற்சவமும் திருவிழாவும் நடைபெறாது என்பதை பணிவுடன் அறியத் தருகின்றோம்.

வெகு விரைவில் எண்ணெய்க் காப்பும் மகா கும்பாபிஷேகமும் இடம் பெறவுள்ளது. அது சம்பந்தமான மேலதிக நேர கால விபரங்கள் மிகவிரைவில் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

13 ஏப்ரல் 2024 சனிக்கிழமை:- தமிழ் சித்திரைப் புத்தாண்டு

விசேட பூஜை காலை 10.30 மணிக்கு நடைபெறும். வியாழன், வெள்ளிக்கிழமைகளில் மருத்து நீர் வழங்கப்படும். பக்தர்கள் ஆலயத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளலாம். – ஆலய நிர்வாகம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# புலிகளிடம் இருந்து நாட்டைப் பாதுகாத்த இராணுவத்தைப் பாதுகாக்கும் அரசை நிறுவுவோம் - சஜித்தின் இனவெறிப் பேச்சு!

நாட்டைப் பாதுகாத்த இராணுவத்தைப் பாதுகாக்கும் அரசாங்கத்தை நிறுவுவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் இராணுவ வீரர்களது மாத்தளை மாவட்ட மாநாடு கடந்த 06 ஏப்ரல் 2024 சனிக்கிழமை மாத்தளையில் இடம் பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

76 வருட கால ஜனநாயக வரலாற்றில் நாட்டிற்காக சேவை செய்த ஒரே எதிர்க்கட்சி ஐக்கிய மக்கள் சக்தியே. எனவே இனிமேலும் பொய்களுக்கு பின்னால் சென்று, பொய்யான பரப்புரைகளை நம்பி ஏமாற வேண்டாம். அவ்வாறு நடந்தால் இப்போது இருக்கும் இடத்தை விட மேலும் மோசமான இடத்திற்கே நாடு செல்லும்.

புலிப் பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை பாதுகாத்த இராணுவ வீரர்களுக்கு உரிய மரியாதையை வழங்கும் அரசாங்கத்தை ஆட்சி பீடமேற்ற ஒன்றிணையுங்கள். 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது கோட்டையில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளான படைவீரர்களின் போராட்டத்தின் போதும் நானும் அங்கு சென்று படைவீரர்களுக்கு செய்ய வேண்டிய பணிகள் குறித்த விடயங்களை புரிந்து கொண்டேன்.

மகிந்த ராஜபக்சவும், கமல் குணரத்னவும் கூட அந்த இடத்திற்கு வருகை தந்தனர். நான் வழங்கிய வாக்குறுதிகளை பொருட்படுத்த தாது மகிந்த ராஜபக்சவும், கமல் குணரத்னவும் சொன்னதையே போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏற்றுக் கொண்டனர். தற்போது அதன் பெறுபேறுகள் கிடைத்து வருகின்றன. அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கு தற்போது பாதுகாப்பற்ற சூழல் ஏற்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் ஊடாக அங்கவீன முற்ற இராணுவ வீரர்களின் உரிமைகள் குறைக்கப்பட்டுள்ளன.



நாட்டுக்காக அளப்பரிய சேவை யாற்றிய இராணுவ வீரர்களுக்கு அரசாங்கம் மாற்றாந்தாய் கவனிப்பையே காட்டி வருகிறது. இது உடனடியாக மாற வேண்டும். 34000 சிவில் பாதுப்பு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தலா 30 இலட்சம் வீதம் வழங்கி சேவையில் இருந்து நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. நாட்டில் பல்வேறு நிதிப்பிரச்சினைகள் இருந்தாலும், 30 வருட கால யுத்தத்தை வெற்றியுடன் முடிவுக்கு கொண்டு வருவதற்கு பாடுபட்ட இராணுவ வீரர்களை மறக்க முடியாது.

யுத்த காலத்திலும், யுத்தத்திற்கு பின்னரான ஆரம்பக் கட்டங்களிலும் இராணுவ வீரர்கள் உயர்வாகக் கருதப்பட்டனர். இராணுவத்தினருக்கு இலவச காணி வழங்கும் திட்டம் முன்னெடுக்கப் பட்டாலும், இராணுவத்தினர் செய்த சேவையை மறந்து அந்த காணியில் வீடுகளை கட்டிய இராணுவ வீரர்களுக்கு காணியின் பெறுமதியை வழங்குமாறு கோரி கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர். நாட்டு மக்களுக்கு இடத்துக்கான உறுதிப்பத்திரங்களை வழங்கி வரும் அரசாங்கம் இராணுவ வீரர்களின் இடத்துக்கான உரிமையை உறுதிப்படுத்தாது விட்டுள்ளது. இலவசமாக வழங்கி வைத்த காணிகளுக்கு பணம் அறவிடுவது வெட்கக்கேடான செயல்.

இராணுவம் குறைக்கப்பட வேண்டும் என்று சமூகத்தில் பேசப்பட்டாலும் , நாடு வங்குரோத்தடைந்தமைக்கு பிரதான காரணம் இராணுவ வீரர்களால் அல்ல, பொருளாதார பயங்கரவாதிகள் தான் பிரதான காரணம். இவ்வாறான தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னர் இந்த இராணுவ வீரர்களுக்கு மாற்றுத் தொழிலும், வருமான ஏற்பாடுகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். பொருளாதார பயங்கரவாதிகள் நாட்டை வங்குரோத்தடையச் செய்துள்ள பின்னனியில், பன்னாட்டு நிறுவனங்களின் செல்வாக்கின் கீழ் நாட்டின் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும் நேரத்தில், நாட்டை பாதுகாத்த இராணுவ வீரர்களை பாதுகாக்க வேண்டும். வீரர்களின் நலனுக்காக தனியான திணைக்களத்தை எமது ஆட்சியில் நிறுவுவோம் என்றார்.

# இராணுவத்திற்கு தமிழ் இளைஞர்கள் கட்டாயம் தேவை! வடமாகாண மாநாட்டில் அநுர குமார திஸநாயக்க உரை



சிங்களம் மற்றும் தமிழ் மக்களுக்கு அவர்களின் சொந்த மொழிகளில் அரசுடன் தொடர்பு கொள்வதற்கு உரிமை உண்டு என்று கூறிய, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, பொது நிறுவனங்கள், முப்படைகள் மற்றும் முப்படைகளிலும் தமிழ் இளைஞர்களின் விகிதம் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வடமாகாண மாநாட்டில் கடந்த வாரம் உரையாற்றிய அவர்.எதிர்கால சந்ததியினரின் சார்பாக நாட்டில் இனவாத அரசியல் கலாசாரத்தை தோற்கடிப்பது இன்றியமையாதது என தெரிவித்தார்.

எமது பிரதான அரசியல் நீரோட்டம் இதுவரை போட்டி அரசியலை ஏற்றுக் கொண்டுள்ளது. தெற்கில் சிங்கள மக்கள் வடக்கிற்கு எதிராக ஒழுங்கமைக்கப்பட்டனர். வடக்கில் தமிழ் மக்கள் தெற்கில் சிங்கள மக்களுக்கு எதிராக ஒழுங்கமைக்கப்பட்டனர். இந்த இனவாத அரசியல் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் உண்மையிலேயே அக்கறை இருந்தால் தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றிணைய வேண்டும் என திஸாநாயக்க வேண்டுகோள் விடுத்தார்.

வடக்கில் உள்ள அரசியல் தலைவர்களை ஒன்று கூடி ஆட்சி அமைக்க அழைக்கிறோம். புதிதாக சிந்திப்போம். நம் நாட்டில் இரண்டு முக்கிய மொழிகள் உள்ளன. இரு மொழிகளுக்கும் சம உரிமை உண்டு. அந்தந்த மொழிகளில் மாநிலத்தை கையாள்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு.

ஒரு தமிழர் அரசுக்குக் கடிதம் எழுதுகிறார். அவர் தமிழில் பதில் பெற வேண்டும். எனவே, பொது நிறுவனங்கள், முப்படைகள் மற்றும் முக்கிய துறைகளில் தமிழ் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தின் விகிதத்தை அதிகரிக்க வேண்டும். இந்த நிலையில் இனவாதம் மற்றும் தீவிரவாதம் நிராகரிக்கப்பட்டு ஒவ்வொரு சமூகத்தின் அடையாளமும் மதிக்கப்படும் புதிய சமூகம் இலங்கைக்கு தேவை என அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

# அரசியலமைப்பு
## நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

மார்ச் 12 இயக்கம்; தென்பகுதியின் முன்னணி புத்திஜீவிகள் மற்றும் சிவில் சமூக செயல்பாட்டாளர்களை உள்ளடக்கியிருக்கும் ஓர் அமைப்பு. இந்த அமைப்பால் நடத்தப்பட்ட மகாநாட்டின் போது அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டம் உரிய முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்னும் கருத்து முன் வைக்கப்பட்டிருக்கின்றது. இதேவேளை, காணாமலாக்கப்பட்ட மக்களுக்கு என்ன நடந்தது என்பது நேர்மையாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவுற்றதன் பின்னரான கடந்த பதினான்கு வருடங்களில் முன்னெடுக்கப்பட்ட நல்லிணக்க முயற்சிகள் முற்றிலும் தோல்வியடைந்திருக்கின்றன. இந்தக் காலத்தில் நம்பிக்கையுடன் நோக்கப்பட்ட சர்வதேச அழுத்தங்கள் எதிர்பார்த்த பெறுபேறுகள் எதனையும் வழங்கவில்லை.

தமிழர் தரப்புகளால் முன்னெடுக்கப்பட்ட அழுத்தங்கள் சர்வதேச அளவில் எதிர்பார்த்த ஆதரவைப் பெறவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் அரசியலமைப்பில் இருப்பவற்றை உரியவாறு அமுல்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் முன்வைக்கப்பட்டுவருகின்றது.

ஏனெனில் இலங்கை மீதான மேற்குலக அழுத்தங்கள் ஓர் எல்லைக்கு உட்பட்டவை. இதனை ஆரம்பத்தில் தமிழர் தரப்புகள் உரிய முறையில் நோக்கத் தவறி விட்டன. தவறுகள் இடம் பெறுவதில் தவறில்லை. ஆனால் அதனைத் தொடர்ந்தும் கவனத்தில் கொள்ளாமல் இருந்தால் அது தவறானதாகும்.

இந்தியா தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்திடமும் இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையிலும் ஒரு விடயத்தை வலியுறுத்தி வருகின்றது. அதாவது, இலங்கையில் தமிழ் மக்கள் கௌரவமாக வாழ்வதற்கு ஏற்றவாறான அரசியல் தீர்வுக்கு உரித்துடையவர்கள். அதேவேளை, அவ்வாறானதொரு தீர்வைக் காணும் நோக்கில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத் தப்பட வேண்டும் அதேவேளை, அவ்வாறு அமுல்படுத்துவது இலங்கைக்குத் தான் நல்லது என்றும் இந்தியா வலியுறுத்தி வருகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் மேற்குலக அழுத்தங்களின் எல்லையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் கரிசனைக்கு மாறான வகையில் அரசியல் தீர்வு விடயத்தில் மேற்குலக அழுத்தங்கள் இருக்கப் போவதில்லை. இந்தியா, அமெரிக்காவுக்கு எதிரான நிலையிலிருந்த காலத்தில் தான் இந்திய — இலங்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

அப்போது, அமெரிக்கா தங்களுக்கு சார்பாக இருக்குமென்றே அப்போதைய ஆட்சியாளர் ஜே. ஆர். ஜெயவர்த் தன எண்ணியிருந்தார். இந்த அடிப்படையில்தான் யானைக் குட்டி ஒன்றுடன் வாஷிங்டனுக்கு சென்றிருந்தார். ஆனால், அவரது எதிர்பார்ப்பு ஈடேறவில்லை அதன் பின்னர் தான், இந்தியாவுடன் இணங்கிச் செல்லும் முடிவை எடுத்தார்.

பிராந்திய அரசியல் சூழலை புரிந்து கொள்வதற்கு இது ஒரு பால பாடமாகும். எனவே, தற்போதுள்ள சூழலில் இந்தியாவின் கரிசனைகளுக்கு மாறாக தலையீடு செய்ய வேண்டிய எந்தவொரு தேவையும் அமெரிக்காவுக்கு இல்லை அது அமெரிக்காவால் முடியாததும் கூட. இந்தியாவின் கரிசனைகளை புறந்தள்ளி ஈழத் தமிழர்களுக்காக செயல்பட வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இல்லை. இதனைப் புரிந்து கொண் டால் தேவையற்ற உணர்ச்சி வசப்பட்ட வாதங் களைத் தவிர்த்து, நாம் அறிவுபூர்வமாக சிந்திக்க முடியும்.

ஆனால் அரசியலமைப்பில் உள்ளவற்றை அமுல்படுத்துவதற்குக் கூட அழுத்தங்கள் தேவைப்படுகின்றன என்பது தான் கசப்பான யதார்த்தமாகும். அதனை உரிய முறையில் தமிழர் தரப்புகள் கையாளாது விட்டால் அரசியலமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்த வேண்டும் என்பது கூட ஓர் உதட்டளவு விவகாரமாகவே சுருங்கிப் போகலாம். எனவே, இந்த விடயத்தில் சாதகமான அபிப்பிராயங்கள் உள்ள அனைவருடனும் தமிழர் தரப்புகள் இணைந்து செயல்பட வேண்டும். நேச சக்திகளை திரட்டிக்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் எதிர்த்துக் கொண்டிருப்பதன் ஊடாக முன்னோக்கிப் போக முடியாது.

# உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் இடம் பிடித்துள்ள 5 தமிழர்கள்

உலகளவில் புகழ் பெற்ற பத்திரிகை நிறுவனமான ஃபோர்ப்ஸ் வெளியிட்டு ள்ள பணக்காரர்கள் பட்டியலில் 5 தமிழர்கள் இடம் பிடித்துள்ளனர். போர்ப்ஸ் 2024ஆம் ஆண்டுக்கான பணக்காரர்கள் பட்டியலை வெளியிட்டு ள்ள நிலையில், அதில் 200 இந்தியர்களில் இடம் பிடித்துள்ளனர். அதில் தமிழ்நாட்டை சேர்ந்த 5 பேர் இடம் பிடித்துள்ளனர்.



### ஷிவ்நாடார்:-

ஹெச்.சி.எல் நிறுவனத்தின் நிறுவனர்களில் ஒருவரான 78 வயதான ஷிவ் நாடார் உலக பணக்காரர்கள் பட்டியலில் 39 வது இடத்தில் உள்ளார். இந்திய அளவில் 3 வது இடத்தில் உள்ளதுடன் இவரின் சொத்து மதிப்பு 34.6 பில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். இந்திய மதிப்பில் ரூ.2.5 லட்சம் கோடி.

### ஸ்ரீதர் வேம்பு சகோதரர்கள்

ஸோகோ நிறுவனத்தின் நிறுவனரும் தலைமை செயல் அதிகாரியுமான ஸ்ரீதர் வேம்புவின் சகோதர் மற்றும் சகோதரி பணக்காரர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.



அவரது தங்கையான ராதா வேம்பு உலகளவில் பணக்காரர் பட்டியலில் 949வது இடத்தில் உள்ளார். இவரது சொத்து மதிப்பு 3.3 பில்லியன் அமெரிக்க டொலர். (ரூ.24 ஆயிரம் கோடி) அதே போல சகோதரர் சேகர் வேம்பு, 2.5 பில்லியன் சொத்து மதிப்போடு (ரூ.18,500 கோடி) உலகளவில் 1330 இடத்தில் உள்ளார்.



### கலாநிதி மாறன்:-

இந்தியளவில் 82வது இடத்தில் உள்ள கலாநிதி மாறனின் சொத்து மதிப்பு 3 பில்லியன் டொலராக அதாவது இந்திய மதிப்பில் ரூ. 22,200 கோடியாக உள்ளது. இவரது தொலைக் காட்சி குழுமம் இந்தியா மட்டுமில்லாது 27 நாடுகளில் ஒளிபரப்பாகி வருகிறது.




### வேணு ஸ்ரீநிவாசன்

டிவிஎஸ் மோட்டார் கம்பெனியின் தலைவரான வேணு ஸ்ரீநிவாசன், இந்தியளவில் பணக்காரர்கள் பட்டியலில் 95 வது இடத்தில் உள்ளார். இவரது சொத்து மதிப்பு 3.6 பில்லியன் டொலர் ஆகும். இந்திய மதிப்பில் 26 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும்.

### சுரேஷ் கிருஷ்ணா

சென்னையை மையமாக கொண்ட சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் நிறுவனத்தின் தலைவரான சுரேஷ் கிருஷ்ணாவின் சொத்து மதிப்பு 1.3 பில்லியன் டொலர் ஆகும். இந்திய மதிப்பில் 9 ஆயிரம் கோடி ஆகும். இவர் டிவிஎஸ் குழுமத்தின் 3ஆம் தலைமுறை



உறுப்பினர் ஆவார். தற்போது இவரது மகள்கள் சுந்தரம் பாஸ்ட்னர்ஸின் தலைமைப் பொறுப்பில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

28 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை
உங்கள் அபிமான ஈழநாடு
பத்திரிகை முல்லைத்தீவு
புனிதபூமி அன்பு இல்லக்
குழந்தைகளுக்காக நடாத்தும்
13வது ஆண்டு இராப்போசன
விழாவில் கலந்து கொள்ள
தமிழ்கூறு நல்லுலகின்
தன்னிகற்ற பேச்சாளர்
“மொழி அரசி” பர்வின் சுல்தானா
அவர்கள் கலந்து கொள்கின்றார்



தொடர்புகளுக்கு:-
ஈழநாடு பரமேஸ்
416 841 9600

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# தமிழ்மக்களின் வழிபாட்டு உரிமைக்கு விடுக்கப்படும் சவால்களுக்குத் தீர்வு வேண்டும்!

## சைவ மகா சபை வேண்டுகோள்

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயம், குருந்தூர் மலை ஆதி சிவன் ஆலயம் போன்ற இடங்களில் தமிழ் மக்களினுடைய வழிபாட்டு உரிமைக்கு விடுக்கப்பட்ட சவால்களுக்கு தீர்வு காணப்படவேண்டும் என சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் பரா.நந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு பௌத்தவாலிபர் சங்கத்தினர் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டதுடன், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் இன, மத ரீதியான பிரச்சனைகள் தொடர்பாக யாழ்ப்பாணம் வணிகர்கழகத்தில் விசேட சந்திப்பொன்றையும் மேற் கொண்டனர்.

குறித்த சந்திப்பில் சமய தலைவர்கள், யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினர், சிவில் சமூகத்தினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே பரா.நந்தகுமார் குறித்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் எங்கள் மக்களின் பிரதான கோரிக்கைகளை இன்றைய காலகட்டத்திலே நாங்கள் எதிர் நோக்குகின்ற சவால்களை பௌத்த வாலிபர் சங்கத்தின் தலைவர் மகேந்திர ஜெயசேகரவின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றோம்.

அவர்களும் கரிசனையோடு அதனை செவிமடுத்திருக்கிறார்கள். குறிப்பாக மத ரீதியாக , இன ரீதியாக அண்மையிலே வழிபாட்டு உரிமைக்கு இடப்பட்டிருக்கின்ற சவால்களை -வெடுக்கு நாறி மலை ஆதி சிவன் ஆலயம், குருந்தூர் மலை ஆதிசிவன் ஆலயம் போன்ற இடங்களிலே நடைபெற்று இருக்கக்கூடிய தமிழ் மக்களை பாதித்திருக்கக் கூடிய, தமிழ் மக்களினுடைய வழிபாட்டு உரிமைக்கு விடுக்க கூடிய சவால்களை அவருடைய கவனத்துக்கு கொண்டு வந்திருக்கின்றோம்.

அவர் அதை தென்னிலங்கைக்கு கொண்டு செல்வதாகவும் அழுத்தத்தை பிரயோகிப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். அதேவேளை தாங்கள் இதை ஆதரிக்கவில்லை என்பதையும் வெளிப்படுத்தியிருந்தார்.

இதனுடைய நீண்ட கால பிரச்சனைக்கு அதிகார பகிர்வு கிடைக்க வேண்டும். எங்களுடைய நாட்டிலே இந்த இரண்டு இனங்களுக்கு இடையிலே ஏற்பட்டிருக்கின்ற முறுகல் பொருளாதார நெருக்கடியை தோற்றுவித்து முழு இலங்கையும் பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்த நிலைமையிலே, உரிமைகளை சமனாக பகிர்ந்து நிற்க வேண்டும் என்பதனை மிக ஆணித்தரமாக அவர்களுக்கு வலியுறுத்தி நிற்கின்றோம்.

அதே போல மயிலத்தமடு, மாதவனை பிரதேசத்தில் வாயில்லா ஜீவன்களை வைத்திருக்கின்ற பண்ணையாளர்கள் பாதிக்கப்படுகின்றதையும் கூறியிருக்கின்றோம். அதாவது, இப்போது எரிபற்று நிலையிலே இருக்கின்ற இந்த பிரச்சனைகள் அடிப்படை பிரச்சனைகள் ஆகும். அதனை தீர்ப்பதால் இங்கு இருக்கின்ற அனைத்து இன.மத மக்களும் மிகவும் சிறப்பாக நல்லுறவோடு வாழக் கூடியதாக இருக்கும். குறிப்பாக இனி வருகின்ற காலங்களிலே இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு எவ்வளவு உச்சபட்ச அழுத்தத்தை அரசாங்கத்துக்கும் அவர்கள் கொடுக்க வேண்டும் என்பது தொடர்பில் நாங்கள் தொடர்ச்சியாக சந்திப்பு மற்றும் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்றார்.

# மாவீரர்களுக்கு அஞ்சலி செய்தால் இனி கடுமையான நடவடிக்கை!

## பொலிஸ்மாஅதிபர் நீதிமன்றத்தில் உத்தரவாதம்

போரில் மரணித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை நினைவு கூர்ந்து வடக்கு கிழக்கில் நடத்தப்படும் மாவீரர் தின நிகழ்வுகளுக்கு எதிராக அதிக பட்சமாக சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் 05 ஏப்ரல் 2024 மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்தார்.

இராணுவத்தின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான ஆனந்த ஜயமன்னவினால், மாவீரர் தின நிகழ்வுகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தும் படி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடக் கோரி சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதே பொலிஸ் மா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரசாங்க சட்டத்தரணி ஷமிந்த விக்கிரம இந்த அறிவித்தலை விடுத்தார். எஸ்.யு.பி. கரலியத்த மற்றும் மாயாதுன்ன கொரயா ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்பாக இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இது வரையில் மாவீரர் நாள் நிகழ்வுகள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பிலான முழுமையான அறிக்கையை தாக்கல் செய்துள்ளதாக பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஷமிந்தவிக்ரம நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் மா அதிபரும் நீதிமன்றில் வாக்குமூலம் சமர்ப்பித்துள்ளதோடு, அதன் ஊடாக மாவீரர் துயிலுமில்லங்கள் தொடர்பானசட்டத்தை சிறந்த முறையில் அமுல்படுத்த பொலிஸார் பாடுபட்டுள்ளதாக வும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். இனிமேல் இவ்வாறான சட்டவிரோத சம்பவங்கள் தொடர்பில் அதிக பட்சமாக சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பேன் என நீதிமன்றில் உறுதிமொழி வழங்குவதாக சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.




முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இந்த சட்டவிரோத செயல் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் மா அதிபர் நீதிமன்றில் உறுதிமொழி வழங்கியிருப்பதால், இந்த மனுவை தொடர வேண்டிய அவசியமில்லை என தெரிவித்தார். இதன்படி மனுவை வாபஸ் பெற அனுமதிக்குமாறு சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். அதன்படி, மனுமீதான விசாரணையை முடித்துக் கொள்ள முடிவுசெய்த மேல்முறையீட்டு நீதிமன்ற ஆயம், பின்னர் மனுவை வாபஸ் பெற அனுமதித்தது.

## காசாவில் இருந்து கற்றுக் கொள்ளுதல்

காசாவில் இடம் பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு இஸ்ரேல் பொறுப்புக் கூற வேண்டும் என்று, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அது உண்மைக்கு மாறானது என்று கூறி, இஸ்ரேல் அதனை நிராகரித்திருக்கின்றது. ஆனால், இந்தப் பிரேரணை தொடர்பில் அமெரிக்கா ஆட்சேபனை தெரிவித்திருப்பதுடன், ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஒக்ரோபர் தாக்குதலை கண்டிக்கும் விடயம் பிரேரணையில் உள்வாங்கப்படாமையினால், அதனை ஆதரிக்க முடியாது என்றும் குறிப்பிட்டிருக்கின்றது.

ஆனால், அதே அமெரிக்கா இலங்கையின் இறுதி யுத்தம் தொடர்பில் பொறுப்புக் கூறலை வலியுறுத்தும் இலங்கையின் மீதான தீர்மானத்தை ஆதரித்திருந்தது என்பதை இந்த இடத்தில் நாம் குறித்துக் கொள்ளலாம்.

இந்த விடயத்தை ஒரு பாடமாக கொள்ள வேண்டும் அதாவது உலக அரசியல் எவ்வாறு பலம் பொருந்திய சக்திகளின் நலன்களுக்கான ஆட்டத்திற்குள் சிக்கியிருக்கின்றது என்பதை புரிந்து கொள்வதற்கு இதனை விடவும் வேறு சிறந்த உதாரணம் தேட வேண்டியதில்லை. அதே வேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை எவ்வாறான அரசியலுக்குள் சிக்கிக் கிடக்கின்றது என்பதையும் இங்கு இலகுவாக புரிந்துகொள்ள முடியும்

அதாவது, இஸ்ரேலை கண்டிக்கும் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையில் ஏன் ஹமாஸ் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை? இங்கு விடயம், ஹமாஸ் தொடர்பில் குறிப்பிட்டால் அந்தப் பிரேரணையை ஆதரிப்பதற்கு இஸ்லாமிய நாடுகள் ஆதரவளிக்காது ஏனெனில் அந்த நாடுகள் எவையும் ஹமாஸ் அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கவில்லை மாறாக, அவர்கள் அனைவருமே ஹமாஸஜீடன் தொடர்பிலுமிருக்கின்றனர். அதற்கு சில நாடுகள் ஆதரவும் வழங்கி வருகின்றன. இதன் காரணமாகவே, குறித்த பிரேரணையில் ஹமாஸின் பயங்கரவாதத் தாக்குதல் உள்வாங்கப்படவில்லை. ஐ.நா மனித உரிமைகள் பேரவை எந்தளவு சிக்கலுக்குள் அகப்பட்டிருக்கின்றது என்பதை இதன் மூலம் ஒருவர் இலகுவாக புரிந்துகொள்ள முடியும்.

இங்கு காசாவில் நடைபெறுவது நீதியானதா அல்லது அநீதியானதா என்பது எவருக்குமே விடயமல்ல மாறாக, அந்த விடயங்களை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது தங்களின் நலன்களுடன் எந்தளவு முரண்படுகின்றன – தங்களின் நலன்களை எந்தளவு பாதிக்கும் என்னும் கேள்விகளிலிருந்தே அனைத்தும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் அரசுகள் தப்பிக் கொள்வதற்கு ஏராளமான ஓட்டைகள் உள்ள உலக அரசியலிலேயே நாம் தனித்து நின்று நீதியை கோருகின்றோம்.

அரசுகள் தப்பித்துக் கொள்வதற்கான ஓட்டைகள் அங்கு அதிகம் என்பதால் தான், இலங்கை மீதான அழுத்தங்களை கண்டு, அரசாங்கம் அஞ்சவில்லை. இதன் காரணமாகவே சர்வதேச அழுத்தங்கள் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் நீதிக்கான கோரிக்கைகளில் எவ்வித தாக்கத்தையும் செலுத்தவில்லை.

நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வரும் விடயம் ஒன்று தான் அதாவது, நாம் தேவையான மக்கள் கூட்டமென்னும் தகுதியை பாதுகாத்துக் கொள்வதன் மூலம் மட்டுமே, இந்த பலவான்களின் உலக அரசியல் சதுரங்க ஆட்டத்தில் வெறும் காய்களாகிப் போவதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும். இதற்காக கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது அடிப்படையில் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பை வழங்கும் உலக அரசியல். பெறுமதியில்லாத மக்கள் கூட்டம் செத்தொழிவதை எவரும் பொருட்படுத்தப் போவதில்லை. இதன் காரணமாகத் தான் ஐயா காப்பாற்றுங்கள் என்று தமிழ் மக்கள் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்த போதும், எவருமே நம்மை திரும்பிப் பார்க்கவில்லை. நமது நேற்றைய நிலைமை எதுவோ அதுதான் இப்போதைய நிலைமையும். ஏனெனில் எங்களுக்கு ஆதரவான நட்பு நாடு ஒன்றில்லை. அதனைப் பெறும் வல்லமையுடனும் நாமில்லை. எனவே நாம் தான் நம்மைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

எதிர்பாருங்கள்! காத்திருங்கள்! வாருங்கள்!
முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின் குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
நடாத்தும் 13வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# இந்திய சமஷ்டியை ஜே.வி.பி ஏற்குமா? அனுராவுடனான சந்திப்பில் சுமந்திரன் சுட்டிக் காட்டியது என்ன?

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமாரவுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத் தரணியுமான எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது இந்திய முறைமையின் வெற்றி குறித்து அநுர குமாரவுக்கு சுமந்திரனால் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வட மாகாண மாநாடு மற்றும் வங்கியாளர் தொழிற் சங்கத்தினருடனான சந்திப்பு ஆகியவற்றில் பங்கேற்பதற்காகத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுராகுமார திசாநாயக்க கடந்த 04 ஏப்ரல் 2024 வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்தார். இதன் போதே மேற்படி சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பு தொடர்பில் சுமந்திரன் தெரிவிக்கையில்,





வங்கியாளர் தொழிற்சங்கத்தினருடனான சந்திப்பின்போது அநுரகுமார திசாநாயக்க, இந்தியா பல்லின சமூகங்கள் வாழும் நாடாக இருக்கின்றது. அங்கு இன ஒற்றுமை காணப்படுவதோடு மன் மோகன் சிங் பிரதமராகப் பதவி வகித்துள்ளார்.

அப்துல்கலாம் ஜனாதிபதியாகப் பதவி வகித்துள்ளார். தற்போதைய ஜனாதிபதி கூட தாழ்த்தப்பட்ட சமூகத்தினை பிரதிநிதித்துவம் செய்பவராக இருக்கின்றார். உள்ளிட்ட விடயங்களைச் சுட்டிக் காட்டியிருந்தார். அவருடைய சுட்டிக் காட்டல்களை அவதானித்திருந்த நான், பின்னர் அவருடனான சந்திப்பின்போது, இந்தியாவில் சிறுபான்மை, மற்றும் நலிவுற்ற சமூகத்தினர் அவ்விதமான பதவிகளுக்கு வருவதற்கும், இனங்களுக்கு இடையில் ஒற்றுமை நிலவுவதற்கும் காரணமொன்று உள்ளது எனக் குறிப்பிட்டேன்.

அச்சமயத்தில் அநுர, சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வு அமுலாக்கப்பட்டுள்ளது என்று கருதுகின்றீர்களா எனக் கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில் இந்தியாவில் அவ்விதமான நிலைமைகள் நிலவுவதற்கு அங்குள்ள அதிகாரப்பகிர்வு முறை ஒருகாரணமாக இருக்கின்ற போதும் மிகவும் முக்கியமான காரணமாக இருப்பது மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டுள்ளது தான் என்ற விடயத்தினை குறிப்பிட்டேன்.

அத்துடன் அவ்விதமான மொழி வாரியிலான அடிப்படையில் மாகாணங்கள் இங்கும் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுவது அவசியமானது என்பதால் தான் வடக்கு கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்ற விடயத்தினை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றோம் என்பதைச் சுட்டிக்காட்டினேன்.

இதேநேரம், வடக்கு,கிழக்கில் உள்ள சமகால அரசியல் நிலைமைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடியதோடு, தொடர்ச்சியாகப் பரஸ்பர கலந்துரையாடல்களை முன்னெடுப்பதென்றும் இணக்கம் காணப்பட்டது என்றார்.

# பொன்னாவெளியில் டக்ளஸ்க்கு மக்கள் கடும் எதிர்ப்பு:- வாய்த்தர்க்கம் கை கலப்பாக மாறியதால் திரும்பி ஓட்டம்



பொன்னாவெளி சீமெந்து தொழிற்சாலையை திறக்க சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தா மக்களின் எதிர்ப்பால் திரும்பினார். பொன்னாவெளி சீமெந்து தொழிற்சாலையை திறக்க சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பொன்னாவெளி பகுதியில் சீமெந்து தொழிற்சாலைக்கான சுன்னக்கற்களை பெற்றுக் கொள்வதற்கு மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், சம்பவ தினம் அமைச்சர் குறித்த தொழிற்சாலையை ஆரம்பித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் மக்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இதன் போது அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும், போராட்டக்காரருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் பொலிசார் கட்டுப்படுத்தியிருந்தனர்.



தொடர்ந்தும் போராட்டம் இடம் பெற்றதுடன் திறப்பு விழாவிற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றது. ஆயினும், மக்களின் தொடர் எதிர்ப்பினால் குறித்த நிகழ்வு இரத்து செய்யப்பட்டு அமைச்சர் திரும்பியுள்ளார்.

# மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிராகரிக்க முடியாது என்கிறார் டக்ளஸின் முன்னான் சகா

தாங்கள் காலம் காலமாக வாழ்ந்த பூர்வீக நிலங்கள் பாதிக்கப்பட்டு தங்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டு மக்களுக்கும் பிரதேசத்துக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் முதலீட்டு முயற்சிகளை தங்களது பிரதேசத்துக்குள் அனுமதிக்காதீர்கள் என்ற பொன்னாவெளி மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஒரு போதும் நிராகரிக்க முடியாது. அவர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை சமத்துவக் கட்சி வன்மையாக கண்டிக்கிறது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பொன்னாவெளியில் 05 ஏப்ரல் 2024 வெள்ளிக்கிழமை இடம் பெற்ற சம்பவம் தொடர்பில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது பொன்னாவெளி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சுன்னக்கல் அகழ்வு காரணமாக அப்பிரதேசத்தில் ஐந்துக்கு மேற்பட்ட கிராமங்கள் முற்று முழுதாக பாதிக்கப்படும்.

100 மீற்றருக்கு மேல் ஆழத்தில் மேற் கொள்ளப்படவுள்ள சுன்னக்கல் அகழ்வு காரணமாக அந்த பிரதேசம் முழுவதும் உவராக மாறி விடும். இதனால் காலம் காலமாக பூர்வீகமாக வாழ்ந்து வந்த மக்கள் தங்களின் சொந்த நிலத்தை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை உருவாகும். எனவே தங்களது பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள சுன்னக்கல் அகழ்வு நடவடிக்கையினை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் என அம் மக்கள் தெரிவிப்பதில் எவ்வித தவறும் இல்லை.



அந்த மக்கள் இன்றைக்கு 270 நாட்களை கடந்து அமைதி வழியில் தங்களது நிலத்தை பாதுகாக்க போராடி வருகின்றார்கள். எனவே அவர்களின் நியாயமான போராட்டத்தை மதித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர வன்முறைகளை தூண்டிவிடும் வகையில் வெளி பிரதேசங்களிலிருந்து மக்களை அழைத்துச் சென்று இனத்துக்குள்ளே மோத (22ம் பக்கம் பார்க்க)

# கோணேஸ்வரரைக் காவிய சுற்றுலாப் பயணிகள்



வரலாற்று சிறப்பு மிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரம் அருள்மிகு மாதுமை அம்பாள் உடனுறை கோணேஸ்வரப் பெருமானின் வருடாந்த மகோற்சம் நடைபெற்று வருகின்றது.

இந்த உற்சவத்தின் போது வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இருவர் இந்து மத கலாச்சார உடையுடன் வருகை தந்து பக்தியுடன் சாமி தூக்கினர்.

சுவாமி வீதிஉலா வரும் போது அவர்கள் சுவாமியை தூக்கியுள்ளனர். வெளிநாட்டவர்கள் இவ்வாறு சுவாமி தூக்கும் நிகழ்வை அங்குள்ளவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

# தமிழரின் வாக்குகளைக் கோருபவர்கள் தாங்கள் விட்ட தவறுகளை ஏற்று முதலில் மன்னிப்புக் கேட்க வேண்டும்







1987 – 1989 காலத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து தமிழர் மீது கட்டவிழ்த்து விட்ட வன் செயல்களுக்கும், 1987 ஜே.ஆர்-ராஜிவ் ஒப்பந்தம் வழி வகுத்த வடக்கு கிழக்கு இணைப்பை நீதிமன்றம் ஊடாக ரத்தாக்கியதற்கும் இதுவரை ஜே.வி.பி. ஒரு போதும் மன்னிப்புக் கேட்டதில்லை. தமிழரின் மறதியைச் சாதகமாக்கி வாக்குகளைச் சுருட்ட முனைவது ஏற்புடையதன்று. மன்னிப்பைக் கேட்டு விட்டு வாக்குகளைக் கேட்க வேண்டும். அதுவே ஜனநாயகம். இந்த வருடம் கட்டாயமாக நடந்தேற வேண்டிய ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டவாறு நடைபெறுமா என்பது சந்தேகத்துக்கிடமாக உள்ள நிலையில், இரண்டு தேர்தல்கள் இந்த ஆண்டு நடைபெற வேண்டுமென்ற கோரிக்கை முசுப்பாத்தி நாடகம் போல அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

எக்காரணம் கொண்டாவது ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தினால் ரணிலின் பலம் ஓங்கி விடும். அதன் பின்னர் நடக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் அவரது அணியே வெற்றி பெற்று விடும் என்ற பீதியே மகிந்த ராஜபக்ச, சஜித் பிரேமதாச அணிகளிடம் காணப்படுகிறது.

இதனால் தான் நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்த வேண்டுமெனக் கேட்கிறார்கள். இது புரியாதவரல்ல ரணில். உலகத்திடம் பெற்ற கடனை தொடர்வதற்கான இரண்டாம் கட்டம் யூலை மாதத்தில் வருவதால் அதற்கு முன்னர் எந்தத் தேர்தலையும் நடத்துவது சாத்தியப்படாது என்று அவர் அறிவித்து விட்டார்.

அப்படியென்றால் ஜனாதிபதித் தேர்தலுடன் ஒரேநாளில் இரண்டு தேர்தல்களையும் நடத்தலாம் தானே அதாவது ஜனாதிபதித் தேர்தலன்று நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்த முடியும் என்பதாக எதிரணிகளின் கோரிக்கை வந்தது. இது சிறுவயதில் விளையாடிய நொடியை அவிழ்ப்பதற்கு மாற்றுநொடி போடுவது போன்றது.

இந்த விளையாட்டுக்கு ரணில் தயாரில்லை. தேர்தல் ஆணையாளர் இவ் விடயத்தில் ரணிலின் பக்கம். இரண்டு தேர்தல்களையும் இந்த வருடத்தில் நடத்துவதற்கு தயாராகவுள்ளோம் என்று இரண்டு வாரங்களுக்கு முன்னர் தேர்தல் ஆணையாளர் சொன்னாரே தவிர, இரண்டையும் ஒரே நாளில் நடத்த முடியுமென்று அவர் தெரிவிக்கவில்லை.

இப்போது ஒரு விடயம் நிச்சயமாகி விட்டது. ஜனாதிபதித் தேர்தலை நடத்த மட்டுமே தேர்தல் ஆணையகம் தன்னைத் தயார்படுத்தி வைத்துள்ளது. இதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறைகளைப் பார்க்கையில் மூன்று வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுவதும் ஓரளவுக்கு உறுதியாகியுள்ளது. ரணில், சஜித், அனுர குமார ஆகியோரே இம்மூவரும். இதற்காக புதிய கூட்டணிகள் உருவாகியுள்ளன. உருவாகியும் வருகின்றன.

சஜித் பிரேமதாச அணியுடன் ஜி.எல். பீரிஸ், டலஸ் அளகப்பெரும ஆகியோர் தலைமையிலான சுதந்திர மக்கள் அணி இணைந்துள்ளது. இது ஆறு உறுப்பினர்களைக் கொண்டது. இவர்கள் அனைவருமே மகிந்தவின் பொது ஜன பெரமுனவுடன் இருந்தவர்கள்.

ஜி.எல்.பீரிஸ் மெத்தப் படித்த கல்விமான். பேராசிரியரும் கூட. அனேகமாக எல்லாச் சிங்கள கட்சிகளுடனும் சேர்ந்து பின்னர் பாய்ந்து பாய்ந்து பிரிந்தவர். தேர்தல்களில் போட்டியிடுவது இவருக்கு ஒவ்வாமை. தேசியப் பட்டியல் எம்.பியாகி அமைச்சர் கதிரையில் ஏறி அனுபவப்பட்டவர். தேர்தலில் நம்பிக்கையில்லாத இவர் அரச பதவிகளில் மோகம் உள்ளவர். இப்போது சஜித் பிரேமதாச அணியுடன் சேர்ந்துள்ளார். சஜித்தின் அணி ஆமை புகுந்த வீடாகப் போகிறது என்கிறார்கள் கட்சிப் பிரமுகர்கள் சிலர்.

ரணில் இன்னமும் தனது கூட்டணியை அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. அநேகமாக அனைத்துக் கட்சிகளிலிருந்தும் இழுத்தெடுக்கப்படுபவர்களின் மெகாகூட்டணயாக இது அமையுமென்று சகல கட்சிகளும் கலக்கத்தில் ஆழ்ந்துள்ளன. அதனால் இதனை ஆரம்பத்திலேயே கிள்ளி விட வேண்டுமென்ற முனைப்பில் – ரணில் இறுதி நேரத்தில் போட்டியிலிருந்து விலகி விடுவாரென்று ஒரு தகவலை ரொக்கட் வேகத்தில் மற்றைய கட்சிகளின் தலைவர்கள் பரப்பி வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெற மாட்டேனென்று ரணில் கருதுவாரானால் தமக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி எவ்வகையிலாவது தேர்தலைப் பின்போட அவர் முயற்சிப்பாரேயன்றி, போட்டியிடாது தவிர்த்துக் கொள்வாரென எதிர்பார்ப்பது மடைமை.

முன்னைய ஜனாதிபதித் தேர்தல்களில் சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறீசேன போன்றவர்களை பொதுவேட்பாளர்களாக ரணில் நிறுத்தியிருந்தார். இன்றைய அரசியல் காலநிலை இப்போது மாற்றம் பெற்று அவர் பக்கம் காற்று வீசுவதாக உணரப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் நட்சத்திர வேட்பாளராக இப்போது ஜொலிப்பவர் அனுர குமார திசநாயக்க. அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் விஜயம் மேற்கொண்டு பல தலைவர்களைச் சந்தித்த இவர் ஆஸ்திரேலியா, கனடா நாடுகளுக்குச் சென்று புலம்பெயர்ந்த இலங்கையர்கள் மத்தியில் உரையாற்றிய முதலாமவர். ரணிலோ சஜித்தோ இவ்வாறு வெளிநாடுகளுக்குச் சென்று பரப்புரை மேற்கொள்வர் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

பொதுவாக ஜே.வி.பி. என அழைக்கப்படும் கட்சியின் தலைவர் இவர். 1965ம் ஆண்டு மே மாதம் 14ம் திகதி றோகண விஜேவீரவினால் ஜே.வி.பி. ஆரம்பிக்கப்பட்டது. எனினும், 1971 ஏப்ரல் 5ம் திகதிய (இந்த மாதத்துடன் 53 ஆண்டுகள் முடிவடைந்து விட்டது) சேகுவரா புரட்சி என்ற பெயரிலான ஆட்சி கவிழ்ப்பு முயற்சியின் மூலமே இது சர்வதேச பிரசித்தமானது. அன்றைய பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கவை உயிருடன் பிடிக்கும் திட்டத்துடன் ஆரம்பமான இந்தப் புரட்சியை இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி தனது ஆயுதப்படையின் பலத்தினால் முறியடித்தார்.

விசேட குற்றவியல் விசாரணை மன்று றோகண விஜேவீரவுக்கும் அவரது தோழர்களுக்கும் ஆயுட்சிறை தீர்ப்பு வழங்கியது. 1977ல் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன இவர்களை விடுதலை செய்து தேசிய அரசியலில் ஈடுபட அனுமதித்தார்.

1982ல் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன வெற்றி பெற்றார். சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஹெக்டர் கொபேகடுவ இரண்டாம் இடத்துக்கு வர, றோகண வீஜேவீர மூன்றாம் இடத்தைப் பிடித்தார். மீண்டும் தலைமறைவு வாழ்க்கைக்குச் சென்ற றோகண விஜேவீர கண்டியிலுள்ள உலப்பன என்ற இடத்திலுள்ள பெருந்தோட்டத்தில் அத்தநாயக்க என்ற மறுபெயரில் இருந்த பொழுது, 1989 நவம்பர் 12ம் திகதி பிடிபட்டார்.

கொழும்புக்கு இராணுவத்தால் கொண்டு செல்லப்பட்ட இவர் மறுநாள் 13ம் திகதி கொல்லப்பட்டார். கொலைக்கான பின்னணியாக மூன்று சம்பவங்கள் சொல்லப்பட்டன. ஆனால் ஒன்று கூட நிரூபிக்கப்படவில்லை. இது தொடர்பான பகிரங்க விசாரணையும் இடம் பெறவில்லை.

சஜித் பிரேமதாசவின் தந்தையான ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்தபோதே றோகண விஜேவீரவின் கொலை இடம் பெற்றது. 1965ல் ஜே.வி.பி. ஆரம்பிக்கப்பட்ட மூன்று வருடங்களின் பின்னரே, 1968 நவம்பரில் இன்றைய அதன் தலைவர் அனுர குமார திசநாயக்க பிறந்தார்.

கட்டுரையாளர்
- பனங்காட்டான் -

1971ல் சேகுவேர புரட்சி இடம்பெற்ற போது அனுர குமார திசநாயக்கவுக்கு மூன்று வயது.

2014 பெப்ரவரி 2ம் திகதி ஜே.வி.பியின் தலைவரான அனுர குமார திசநாயக்க கடந்த பத்தாண்டுகளில் ஒரு தடவை கூட றோகண விஜேவீரவின் கொலைக்கு நீதிவிசாரணை கோரவில்லை. 1987ல் இடம் பெற்ற இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்த ஜே.வி.பி. இந்தியப் பொருட்களை தென்னிலங்கையில் விற்பனை செய்த (கற்பூரம், குங்குமம், சந்தனம் உட்பட) வணிக நிலையங்களையும், இந்தியத் திரைப் படங்களை இறக்குமதி செய்த தமிழரின் படமாளிகைகளையும் தாக்கி, எரித்து நிர்மூலமாக்கினர். பல தமிழர் காயமடைந்தனர். சிலர் மரணித்ததும் உண்டு.

1987ம் ஆண்டிலேயே ஓர் இளைஞனாக ஜே.வி.பியில் இணைந்து தீவிரமாகச் செயற்பட்டவர் அனுர குமார திசநாயக்க. அதன் பின்னரே பல்கலைக்கழகம் சென்று விஞ்ஞானப் பட்டதாரியானவர். இன்று அதன் தலைவர். ஜனாதிபதி வேட்பாளர். ஜே.வி.பி. அவ்வப்போது தேவை கருதி வெவ்வேறு பெயர்களில் இயங்கி வந்துள்ளது. 1987ல் ஜே.ஆர்-ராஜிவ் ஒப்பந்தத்தை எதிர்த்த போது தேசப்பிரிய ஜனதா வியாபாரய (Peoples Patriotic Front) என அழைத்தது.

இன்று ஜனாதிபதித் தேர்தலுக்குப் போட்டியிடும் போது தேசிய மக்கள் சக்தி (National Peoples Power) என நாமம் பூண்டுள்ளது. என்ன தான் கோப்பையை மாற்றினாலும் உள்ளிருக்கும் பானம் ஒன்றுதான்.

தமிழர் பிரச்சனையை கடந்தாண்டு பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் தீர்த்து வைப்பேன் என்று கூறிய ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி கதிரையை இறுகப் பற்றிய பின்னர் அதனை மறந்து விட்டார். தேர்தல் பரப்புரைக்காக தமிழர் தாயகம் செல்லும் அனுர குமார வடக்கு மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க விரும்புவதாக தமிழ் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். கடந்த வாரம் யாழ்ப்பாணம் சென்ற இவருக்கு இந்திய அரசியல் நடைமுறை வகுப்பை தமிழரசு எம்.பி. சுமந்திரன் நடத்தியுள்ளார்.

தமிழ் மக்கள் பிரச்சனையை வெறுமனே வடமாகாண தமிழர் பிரச்சனையாக உருவம் கொடுத்து வடக்கின் பிரச்சனை என்று சொல்லி வருபவர் ரணில். அவரது பாதையில் வடக்கு மக்களின் பிரச்சனையை தீர்க்கப் போவதாக அழைப்பு விடுத்தூள்ளார் அனுர குமார. சிங்களத் தலைவர்களிடம் கட்சி மோதல்கள் இருந்தாலும் தமிழர் மீதான பார்வையில் இந்த ஒற்றுமை எப்போதும் உண்டு. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் 13வது திருத்தம் வடக்கும் கிழக்கும்

(22ம் பக்கம் பார்க்க)

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள்.

இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

06 ஏப்ரல் 2024 - 12 ஏப்ரல் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களுடைய ஆறாவது ஆண்டு நினைவு நாள் 09 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பொன்னம்மா ஐயாத்துரை

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களின் ஆறாவது ஆண்டு நினைவு நாள் 12 ஏப்ரல் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம்

புங்குடுதீவு 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 12 ஏப்ரல் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை பத்மநாதன்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை பத்மநாதன் அவர்களுடைய ஆறாவது ஆண்டு நினைவு நாள் 10 ஏப்ரல் 2024 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்துரை பத்மநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகரெத்தினம் முருகேசு

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான் மேற்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 16 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 60வது ஆண்டுசிரார்த்த தினம்



திரு சுப்பிரமணியம் கந்தையா

திருமதி பார்வதி கந்தையா

அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது 60வது ஆண்டு சிரார்த்த தினம் 07 ஏப்ரல் 2024 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



04 ஏப்ரல் 2024 வியாழக்கிழமை குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மயில்வாகனம் பாக்கியம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்யைதினம் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 ஏப்ரல் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி இராமதாசன் விஜயஸ்ரீ தம்பதிகளின் செல்வப்புதல்வி லக்சனா இராமதாசனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி லக்சனா தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



07 ஏப்ரல் 2024 ஞாயிற்றுக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா, திருமதி பார்வதி கந்தையா இணையர்களது 60வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் இணையர்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




08 ஏப்ரல் 2024 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ரஜிதன் இதயலிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு ரஜிதன் இதயலிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



09 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களுடைய ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 ஏப்ரல் 2024 புதன்கிழமை யாழ்.அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை பத்மநாதன் அர்களுடைய ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 ஏப்ரல் 2024 வியாழக்கிழமை கனடா **Exeuitive woodwork Ltd** ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



12 ஏப்ரல் 2024 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



12 ஏப்ரல் 024 வெள்ளிக்கிழமை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்






# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



உ
ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயம்
# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 | TEL: 416-321-6104 | FAX: 416-321-7557
Website: www.ayyappan.ca | Facebook: Canada Sri Ayyappan Hindu Temple





## ஸ்ரீஐயப்ப சுவாமி விசுக்கனி அலங்கார உற்சவமும், ஐயப்பன் விரத மாலை அணியும் வைபவமும்
## SRI AYYAPPAN GARLANDED OCCASION

ஸ்காபரோ 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் விசுக்கனி தரிசனத்திற்காக மாலை அணியும் வைபவம் 5.04.2024 வெள்ளிக்கிழமை காலை 7:00 மணிக்கு கணபதி ஹோமத்துடன் விசுக்கனி அலங்கார உற்சவம் ஆரம்பமாகும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும். உபயங்கள் செய்ய விரும்பும் அடியார்களும் முன்கூட்டியே காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

### நிகழ்ச்சி நிரல்

**கணபதி ஹோமம்**
05.04.2024 வெள்ளி
காலை 7:00 மணி

**மாலை அணிதல்**
05.04.2024 வெள்ளி
காலை 7:00 மணி முதல்
நண்பகல் 12:00 மணிவரை
மாலை 7:00 மணி முதல்
இரவு 8:00 மணி வரை

**நெய் நிரப்புதல்**
12.04.2024 வெள்ளி
காலை 7:00 மணி முதல்
பகல் 11:00 மணி வரை

**சுவாமிமார்கள் 18 படிகள் ஏறி நெய் அபிசேகம்**
13.04.2024 சனிக்கிழமை
காலை 7:00 மணி முதல்
காலை 9:00 மணி வரை

**புதுவருட பிறப்பு பூசை**
13.04.2024 சனி
காலை 10:00
மணிக்கு ஆரம்பம்.

**தேர்த்திருவிழா**
13.04.2024 சனி
மாலை 7:00 மணி

இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

உ
ஓம் சிவமயம்



# ஜெயதுர்க்கா தேவஸ்தானம்-மிசிசாகா

1808-Drew Rd Mississauga Ont, L5S 1J6 • Tel: 905.612.1856

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன
சம்புறோட்சண

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**21.04.2024** ஞாயிறு காலை 9:35 மணி

ஐந்துகரத்தனை யானை முகத்தனை
இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடிபோற்றுகின்றேனே

மணியே மணியினொளியே ஒளிருமணிபுனைந்த
அணியே அணியுமணிக்கழகே அணுகாதவர்குப்
பிணியே பிணிக்குமருந்தே அமரர்பெருவிருந்தே
பணியேனொருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே

முருகனே செந்திமுதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே ஒருகைமுகன்
தம்பியேநின் தண்டைக் காலெப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் யான்

| எண்ணெய் காப்பு | ஸ்தூபிவிமானங்கள் அபிஷேகம் | மூலமூர்த்திகள் கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 19-04-2024 வெள்ளி<br>காலை 8:00 - இரவு 9:00 மணி வரை<br>20-04-2024 சனி<br>காலை 8:00 - மாலை 3:00 மணி வரை | 21-04-2024 ஞாயிறு<br>காலை 09:15 மணி | 21-04-2024 ஞாயிறு<br>காலை 09:35 மணி |

ஜெயதுர்க்காதேவியின் மெய்யடியார்களே!

சீரும் சிறப்பும் மிக்க வட அமெரிக்காக் கண்டத்தின் திலகமாக விளங்கும் கனடா நாட்டில் ஒன்றாறியோ மாநிலத்தில் மிசிசாகா என்னும் திருநகரில் தெய்வீகம் நிறைந்ததாக விளங்கும் அருள்மிகு ஜெயதுர்க்கா தேவஸ்தானத்தில் விநாயகர், சிவன், சக்தி, தட்சிணாமூர்த்தி, முருகன், ஐயப்பன், நவக்கிரகங்கள், பைரவர், சண்டேஸ்வரி ஆகிய பரிவார மூர்த்திகள் புடைசூழ வீற்றிருந்து தம்மை வழிபடும் அடியார்களுக்கு நல்லருள்பாலித்து இரட்சித்துவரும் அன்னை ஜெயதுர்க்கா தேவியின் ஆலயத்தை அன்னையின் திருவருள் துணைகொண்டு சீர்திருத்தியும் புதுப்பித்தும் வர்ணந்தீட்டியும் அழகுறச் செப்பனிட்டு நிகழும் குரோதி வருடம் தமிழ் சித்திரை 9-ம் நாள் (21-04-2024) ஞாயிற்றுக் கிழமை பூர்வ திரயோதசி திதியும், அத்த நட்சத்திரமும், அமிர்த யோகமும் பொருந்திய சுபதினத்தில் காலை 09:15 மணி முதல் 10:35 மணிக்குள் மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில் மூலமூர்த்திகளுக்கும் தொடர்ந்து ஏனைய உற்சவ மூர்த்திகளுக்கும் மஹாகும்பாபிஷேகம் நிகழ்த்த அன்னையின் திருவருள் கைகூடியுள்ளது. அம்பிகையின் அடியவர்கள் அனைவரும் கீழ்காணும் கிரியா நிகழ்வுகளின் போது காலையும் மாலையும் ஆலயத்திற்கு வருகைதந்து அனைத்துக் கிரியைகளிலும் பங்குபற்றியும் தரிசித்தும் ஜெயதுர்க்காதேவியின் கடைக்கண்களின் வீட்சண்ய நல்லருளால் கல்விச்சிறப்பு, உத்தியோக உயர்வு, குடும்ப சந்தோஷம், தீர்க்க சௌமாங்கல்ய பாக்கியம், புத்திரசந்தானம், நோயற்ற வாழ்வு, குறைவற்ற செல்வம், மங்காத புகழ், நீண்ட ஆயுள் விருத்தி ஆகிய நற்பேறுகள் அனைத்தையும் பெற்று வாழும் வண்ணம் வேண்டுகிறோம்.

## மஹா கும்பாபிஷேக கிரியா நிகழ்வுகள்

| | |
|---|---|
| 15-04-2024 திங்கள்<br>அதிகாலை 05:25 மணி | விக்னேஸ்வர பூஜை அனுக்ஞை கர்மாரம்பம் திரவிய விபாகம்.<br>சிற்பி உபசாரம், நயனோன்மீலனம் (புதியமூர்த்திகளுக்கு கண் திறத்தல்), கணபதி ஹோமம், யந்திரத்திற்கு இலட்சார்சனை புதியமூர்த்திகளுக்கு தான்யாதிவாசம். |
| 15-04-2024 திங்கள்<br>மாலை 05:00 மணி | பிரவேச பலி, கிராமசாந்தி, யந்திரத்திற்கு லட்சார்சனை. |
| 16-04-2024 செவ்வாய்<br>காலை 07:00 மணி | ரட்க்ஷோக்ன ஹோமம், திசாஹோமம், சாந்தி ஹோமம், சம்ஹிதாஹோமம், மூர்த்தி ஹோமம், யந்திரத்திற்கு லட்சார்சனை பூர்த்தி ஜலாதிவாசம் முதலியன. |
| 16-04-2024 செவ்வாய்<br>மாலை 04:00 மணி | நவக்கிரஹ ஹோமம், மிருத்யுஞ்ஜய ஹோமம், வாஸ்து சாந்தி, சயனாரோஹணம். |
| 17-04-2024 புதன்<br>காலை 07:00 மணி | கங்காதீர்த்த பூஜை, ஸ்தூபிஸ்தாபனம். |
| 17-04-2024 புதன்<br>மாலை 4:00 மணிமுதல் | தீபஸ்தாபனம் (**திருவிளக்குப் பூஜை**), அஷ்டபந்தனம், சுமங்கலிபிரார்தனை, சுவாசினி பூஜை, நவரத்னநியாசம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், நடைபெறும்.<br>(தீப பூஜையில் பங்குபெற விரும்பும் சுமங்கலிப்பெண்கள் கன்னிப்பெண்கள் அனைவரும் ஆலயத்தில் முன்னரே பெயர்களைப் பதிவுசெய்து பங்கு பற்றி அன்னையின் அருள்பெறுக). |
| 18-04-2024 வியாழன்<br>காலை 08:00 மணி | தேவிமஹாத்மியம், சண்டிஹோமம். |
| 18-04-2024 வியாழன்<br>மாலை 04:00 மணி | மிருத்சங்கிருஹணம் குண்டமண்டல ஸ்தாபனங்கள். |
| 19-04-2024 வெள்ளி<br>காலை 07:00 மணிமுதல் | தைலாப்பியங்கம் (**எண்ணைய்க் காப்பு**), பூதாக்கினி சங்கிருஹணம், வேதபாராயணம். |
| 19-04-2024 வெள்ளி<br>மாலை 4:00 மணி | பாராயணம் அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், கலாகர்ஷணம், யாத்ரா ஹோமம். க்ஷண ஹோமம்.- பிரதான கும்பங்கள் யாகசாலைப் பிரவேசம் வேதிகார்சனை. அக்கினிகார்யம் நவாக்கினி விபஜனம். பூர்ணாகுதி காலம்-1, தீபாராதனை. வேத ஸ்தோத்திர திருமுறை கீத வாத்ய நிருத்தம் முதலிய உபசாரங்கள்.<br>*(தேவார, புராண, பக்திப்பாமாலை, கீதவாத்தியம், நடனம்...) |
| 20-04-2024 சனி<br>காலை 07:00 மணி | விசேஷ சந்தி பூதசுத்தி, யாக பூஜை பரிவார யாகங்கள், விசேஷ திரவியஹோமம், காலம்-2 பூர்ணாகுதி, தீபாராதனை. வேத ஸ்தோத்திர திருமுறை கீத வாத்ய நிருத்தம் முதலிய உபசாரங்கள். * |
| 20-04-2024 சனி<br>மாலை 04:00மணி | விசேஷ சந்தி பூதசுத்தி யாக பூஜை விசேஷ திரவியஹோமம் பிம்பசுத்தி சுவாமிகளுக்கு கங்கணதாரணம். நியாஸாதிகள் நாடீசந்தானம். திரிகண்ட ஸ்பர்ஸாகுதி பூர்ணாகுதி காலம்-3 தீபாராதனை. வேத ஸ்தோத்திர திருமுறை கீதவாத்ய நிருத்தம் முதலிய உபசாரங்கள். * |
| 21-04-2024 ஞாயிறு<br>அதிகாலை 05:30மணி | யாகபூஜா பிரதான ஹோமங்கள், பூர்ணாகுதி காலம்-4 அக்னி சம்யோஜனம். மஹாபூர்ணாகுதி, அந்தர்பலி, பஹிர்பலி, தேவார புராணாதிகள், தானாதிகள்.<br>காலை 08:30 கும்பங்கள் புறப்பாடு, மிதுன லக்கின சுப முகூர்த்தத்தில் காலை 09:15 விமான தூபிகள் அபிஷேகம் தீபாராதனை, அருள்மிகு ஜெயதுர்க்கா தேவிக்கு வேததிருமுறை சங்க மங்கல நானா வாத்திய கோஷங்களுடன் மஹா கும்பாபிஷேகம், தொடர்ந்து அனைத்துப் பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம், கோ பூஜா, தசமங்கல தர்சனம் ஆகியன நடைபெறும். |
| 12-00 மணிமுதல்<br>மஹாஅபிஷேகம்-பூஜை<br>தொடர்ந்து மஹேஸ்வர பூஜை | அனைத்து மூல மூர்த்திகளுக்கும் விசேஷ திரவிய அபிஷேகங்களுடன் நவகும்ப மஹா அபிஷேகம் நடைபெற்று விசேஷ பூஜை, அர்ச்சனைகள், மகேஸ்வரபூஜை (அன்னதானம்) ஆகியன இடம் பெறும். |

# தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக முதல்வருக்கு அனுப்பிய கடிதம்

கட்டுரையாளர்: யாழ்ப்பாணத்தில் இருந்து – நிலாந்தன் –



கடந்த 19ஆம் திகதி தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட ஒரு கூட்டுக் கடிதம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய உப தூதரகத்தில் கையளிக்கப்பட்டது. திருச்சி சிறப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த மூன்று அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு தமிழக முதல்வரிடம் அக்கூட்டுக் கடிதம் கோரிக்கை விடுத்திருந்தது.

திருச்சி சிறப்பு முகாமில் உள்ள ஈழத் தமிழர்களின் நலன்களைக் கவனிக்கும் ஒரு வழக்கறிஞரின் பங்களிப்போடு அக் கூட்டுக் கடிதம் தயாரிக்கப்பட்டது. கடந்த 17 ஆம் தேதி உத்தியோகப் பற்றற்ற விதத்தில் தமிழக முதல்வரிடம் கையளிக்கப்பட்டது. பின்னர் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள உப தூதரகம் ஊடாக அனுப்பப்பட்டது. தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 12பேர் ஒன்றாக இணைந்து அப்படி ஒரு கடிதத்தை அனுப்பியமை முக்கியமான ஓர் அடைவு. உடல்நலக் குறைவு காரணமாக சம்பந்தர் கையெழுத்திடவில்லை.

2021 ஆண்டும் ஒரு கூட்டுக் கடிதம் தயாரிக்கப்பட்டது. அந்த ஆண்டு நடக்கவிருந்த ஐநா மனித உரிமைகள் கூட்டத் தொடரை முன்னிட்டு அந்த ஆண்டு ஜனவரி மாதம் அக்கடிதம் அனுப்பப்பட்டது.கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளின் பின் மீண்டும் 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ஒரு கூட்டுக் கடிதத்தை தமிழக முதல்வருக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

அதிகம் கவனத்தை ஈர்க்காத அந்த முயற்சி மகத்தானது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் சிறப்பு முகாம் கைதிகளின் விடயத்தில் ஒன்றிணைந்த அதே கட்சிகள் ஏனைய எல்லா விடயங்களிலும் ஒன்றிணையும் என்று கற்பனை செய்யத் தேவையில்லை. தமிழரசுக் கட்சிக்குள் நடப்பவை முழுத் தமிழ் அரசியலுக்கும் பொருந்தும். தமிழ் மக்களுக்கு இப்பொழுது எதிரிகள் வெளியில் இல்லை .சொந்த வீட்டுக்குள் தான் இருக்கிறார்கள்.ஒரு தேர்தல் ஆண்டில் தமிழ் மக்கள் ஒருமித்து முடிவெடுக்க முடியாத ஒரு நிலை.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில், தமிழ் மக்கள் மத்தியில் மூன்று விதமான முடிவுகள் காணப்படுகின்றன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக்கணிக்கின்றது. ஆனால் அந்த முடிவை மக்கள் மயப்படுத்த வேண்டும் என்று அக்கட்சி சிந்திக்கவில்லை. அதாவது தன்னுடைய முடிவு சரி என்று மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்து தேர்தலைப் புறக்கணிக்கும் ஒரு மக்கள் மக்கள் ஆணையைப் பெற அக்கட்சி முயற்சிக்கவில்லை.

தமிழரசுக் கட்சி இரண்டாகி நிற்கிறது. ஒரு பிரிவு சஜித்தோடு நிற்பதாகத் தோன்றுகிறது. மற்றொரு பிரிவு தமிழ்ப் பொது வேட்பாளருக்குக் கிட்டவாக நிற்கிறது. குத்துவிளக்கு கூட்டணிக்குள், ஈபிஆர்எல்எப் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முடிவை எப்பொழுதோ எடுத்து விட்டது. ஏனைய கட்சிகள் அது தொடர்பாக தமது உத்தியோகபூர்வ நிலைப்பாடுகளை அறிவிக்கவில்லை. விக்னேஸ்வரன், பொது வேட்பாளரை ஏற்றுக் கொள்கிறார். இப்படியாகத் தமிழ்த் தரப்பில் மூன்று நிலைப்பாடுகள் உண்டு.

ஆனால் அவை நிலைப்பாடுகள் தான். கருத்துருவாக்கம் என்ற செயற்பாட்டுக்கும் அப்பால் என்பதற்கும் அப்பால் அதை நோக்கிய கட்டமைப்புகள் எவையும் இதுவரை உருவாக்கப்படவில்லை. அதாவது கிட்டத்தட்ட ஆறு மாதங்களில் வரக்கூடிய ஒரு தேர்தலை எதிர்கொள்வதற்குத் தமிழ்த் தரப்பு இப்படித்தான் தயாராகக் காணப்படுகின்றது.

அதேசமயம் தென்னிலங்கையில் பிரதான கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி திட்டமிட்டு உழைக்கின்றன. ஜேவிபி தான் முதலில் உற்சாகமாக உழைக்க தொடங்கியது. அரகலயவின் விளைவு அது.



தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.



அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பசில் அதிகரித்து எதிர்பார்ப்போடு உழைத்து வருகிறார். அமெரிக்காவிலிருந்து வந்த பசில் தமது பேரபலத்தை அதிகரிக்கும் நோக்கத்தோடு கருத்து தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலை முதலில் வைப்பதற்குப் பதிலாக பொதுத் தேர்தலை முதலில் வைக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

ஏனென்றால் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் மக்களுக்கு முற்கற்பிதங்களை ஏற்படுத்தும். முன் முடிவுகளை உருவாக்கும். ஒரு வெற்றி அலையானது தொடர்ந்து அடுத்தடுத்த தேர்தல்களிலும் எதிரொலிக்கும். எனவே ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பொதுத் தேர்தலிலும் மக்கள் வாக்களிக்கக் கூடும். ஒரு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவாராக இருந்தால், அவர் பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்காக கிடைத்த வெற்றியாக அது காட்டப்படும். அதனால் ரணிலின் பேரபலம் அதிகரிக்கும். அதன்பின் நடக்கக்கூடிய நாடாளுமன்ற தேர்தலில் தாமரை மொட்டுக் கட்சி, ரணிலோடு பேரம் பேசி வேண்டிய அமைச்சுகளைப் பெறுவது கடினமாக லாம். எனவே தான் முதலில் ஒரு பொதுத் தேர்தலை வைக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள்.

ஒரு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றி பெறுவாராக இருந்தால் அது அவருடைய சொந்தக் கட்சியின் வாக்கு வங்கியால் அல்ல என்பது அவருக்கே தெரியும். தாமரை மொட்டுக்களின் பலமின்றி வெற்றி பெற முடியாது என்ற நிலை தான் இப்பொழுது வரை உண்டு. அவருடைய சொந்தக் கட்சியின் பலம் அவருக்கு குறைவு. எனவே அவருடைய சொந்தப் பலம் எது என்பதனை அவருக்கு உணர்த்தும் விதத்தில் ஒரு பொதுத் தேர்தலை முதலில் வைத்தால் அதில் ரணில் தன்னுடைய சொந்தப் பலம் எது என்பதைக் கண்டு பிடித்து விடுவார். அப்பொழுது அவருடைய பேரம் குறைவாக இருக்கும். அந்த நேரத்தில் ராஜபக்சங்கள் அவருடன் பேரம் பேசுவது இலகுவாக இருக்கும். நாமலை பிரதமராக நியமிக்கும்படி கேட்கலாம்.

எனவே முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் அதில் ரணிலுக்குப் பேர பலம் அதிகரிக்கும். முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தால் அதில் ரணிலின் பேரம் குறையும். எனவே ரணிலின் பேரத்தைக் குறைப்பது தான் ராஜபக்சகளின் திட்டம். இதை இன்னும் ஆழமாகச் சொன்னால் அடுத்த நாடாளுமன்றத்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது தான் அவர்களுடைய திட்டம்.

எனவே ராஜபக்சத்தை தங்களுடைய பேரபலத்தை நிரூபிப்பதற்குத் தயாராகி வருகிறார்கள் என்று பொருள். இதை அதன் சாராம்சத்தில் சொன்னால், ராஜபக்சக்கள் தற்காப்பு நிலையில் இருந்து வலிந்து தாக்கும் நிலையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று பொருள். கடந்த 2021 ஆம் ஆண்டு அரகலயவின் பொது அவர்கள் பின் வாங்கும் நிலையில் இருந்தார்கள். சொந்தத் தேர்தல் தொகுதிகளிலேயே அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கவில்லை. படை முகாம்களில் அவர்கள் அடைக்கலம் தேட வேண்டி வந்தது. ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய வெளிநாடு ஒன்றுக்கு தப்ப வேண்டி வந்தது. ஆனால் அவ்வாறான தற்காப்பு நிலையில் இருந்து இப்பொழுது வலிந்து தாக்கும் ஒரு நிலையைத் தாங்கள் அடைந்து விட்டதாக அவர்கள் நம்புகிறார்கள். எனவே அதை நோக்கித் தான் அவர்கள் திட்டமிடுகிறார்கள். கோட்டாபயவின் புத்தகமும் அந்த அடிப்படையில் எழுதப்பட்டது தான்.

ஆனால் அமெரிக்காவிலிருந்து வந்த பசில் நினைத்தபடியெல்லாம் அரசியலை நகர்த்த முடியாது என்பதைத் தான் அண்மையில் அமெரிக்காவுக்கு சென்று வந்த மைத்திரியின் சர்ச்சைக்குரிய கூற்று வெளிப்படுத்துகின்றதா? மைத்திரி கூறுகிறார், ஈஸ்டர் குண்டு வெடிப்புத் தொடர்பாக தனக்கு இரகசியங்கள் தெரியும் என்று. அவர் ஏன் அவ்வாறு கூறுகிறார்? அதுவும் ஒரு ஜனாதிபதித் தேர்தல் வர இருக்கும் பின்னணியில் ஏன் அப்படிக் கூறுகிறார்? ஏனென்றால், ஈஸ்டர் குண்டு வெடிப்பைப் பற்றிப் பேசினால் அதன் விளைவின் விளைவுகள் ராஜபக்சக்களைத் தான் பாதிக்கும்.

ராஜபக்சக்கள் தற்காப்பு நிலையில் இருந்து வலிந்து தாக்கும் நிலைக்கு முன்னேறுவதை மேற்கு நாடுகள் விரும்பவில்லையா? அப்படிப் பார்த்தால், மைத்திரி கிளப்பிய சர்ச்சையும் சனல் நாலு வீடியோவை போன்றது தானா? இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் ராஜபக்சக்களை அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்குச் சவாலாக எழாதபடி பார்த்துக் கொள்வது தான் மேற்கு நாடுகளின் திட்டமா? அதாவது ரணிலுடைய வழிகளை இலகுவாக்கிக் கொடுத்தல்?

மேற்கு நாடுகளும் மேற்கத்திய பெரு நிறுவனங்களாகிய பன்னாட்டு நாணய நிதியம் போன்றனவும் ரணில் பதவியில் தொடர்ந்துமிருப்பதைத் தான் விரும்புவதாகத் தெரிகிறது. மேற்கத்திய பாரம் பரியத்தில் வந்த அவரைக் கையாள்வது இலகுவானது என்று அவை நம்புகின்றன. கத்தியின்றி ரத்தமின்றி, தேர்தலின்றிக் கிடைத்த ஆட்சி மாற்றத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கும் தொடர விரும்புகின்றன. எனவே மேற்கு நாடுகளின் விருப்பத் தெரிவு ரணில்தான்.

ராஜபக்சக்கள் தாம் வலிந்து தாக்கும் நிலைக்கு வளர்ந்து விட்டதாக நம்பினாலும் கூட, தங்களுக்குப் பொருத்தமான முன் தடுப்பு ரணில் விக்கிரமசிங்க தான் என்பதில் தெளிவாக இருக்கிறார்கள்.

எனவே, அவர்கள் ரணிலுடன் தமது பேரத்தை அதிகப்படுத்த விரும்பினாலும், ரணிலை விட்டால் அவர்களுக்கு வேறு தெரிவில்லை. அப்படித்தான் மகா சங்கத்திற்கும், படைத்தரப்புக்கும். அதாவது உள்நாட்டிலும் அனைத்துலக அளவிலும் மேற்கு நாடுகள் மத்தியிலும் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தான் அதிகம் வரவேற்புக் காணப்படுகின்றது. அதனால் தான் ராஜபக்சக்கள் அவருடைய வழிகளைத் தடுக்காமல் இருக்க மைத்திரி அவ்வாறு பேச வைக்கப்படுகின்றாரா? ஆயின் இந்த விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன? ரணில் விக்கிரமசிங்க எல்லாப் பேரரசுகளையும் சம தூரத்தில் வைத்துக் கையாளக் கூடிய ஒருவர். அப்படிப்பட்ட ஒருவர் இந்தியாவைப் பொறுத்த வரையிலும் கையாளக் கடினமானவர். அப்படிப் பார்த்தால் இந்தியா ரணிலை ஒரு விருப்பத் தெரிவாக எடுக்க முடியாது.

அது ரணிலுக்கும் விளங்கும். அதனால் தான் அவர் ஜனாதிபதித் தேர்தலில் இந்தியா தனக்கு எதிராகப் போகாமல் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தியாவுடன் குறிப்பிடத்தக்க அளவுக்கு இணங்கிப் போக முயற்சிக்கின்றார். யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளிலும் இந்திய நிறுவனங்களுக்கு மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்களை வழங்கும் உடன்படிக்கைகள் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி கையெழுத்திடப்பட்டன. அது போலவே இராமர் பாலம் என்ற விடயத்திலும் ரணில் உண்மையாக இருக்கிறார் என்ற ஒரு தோற்றம் வெளிக் காட்டப்படுகிறது. இராமர் பாலத்தை கட்டப் போவதாக ரணில் இந்தியாவை நம்ப வைக்கின்றார். தன்னை நம்பத் தயாரற்ற ஒரு பக்கத்து பேரரசுக்கு நாட்டை முழுமையாகத் திறக்கத் தயார் என்று காட்ட ரணில் முற்படுகிறாரா?

இந்தியப் பொருளாதாரம் அண்மை ஆண்டுகளில் வளர்ச்சி கண்டு வருகிறது. தமிழகத்திலும் அது தான் நிலைமை. இவ்வாறு ஒரு பெரிய பொருளாதாரத்தோடு சிறிய இலங்கைத் தீவை நிலத்தால் இணைத்தால், இலங்கைத் தீவு விழுங்கப்பட்டு விடும் என்ற ஒரு பயத்தை சிங்கள மக்கள் மத்தியில் இலகுவாகத் தூண்ட முடியும். இந்த விடயத்தை ரணில் எப்படிக் கையாள்வாரோ தெரியவில்லை. ஆனால் அவர் ஒரு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி. பாலங் கட்டத் தயார் என்று சொன்னதிலிருந்து அவர் பின்வாங்க முடியுமா இல்லையா என்பது இந்தியா அந்த விடயத்தை எப்படிக் கையாளப்போகிறது என்பதில் தான் தங்கியிருக்கின்றது.

புதுடில்லி ஜேவிபியை அழைத்து கதைத்தமையும் ரணில் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் நோக்கிலான ஒரு நடவடிக்கை தான். ரணிலுக்கு எதிராகக் கையாளப்படத்தக்க சக்திகளை இந்தியா

(22ம் பக்கம் பார்க்க)

# கச்சதீவு அரசியல் இலாபம் ஈட்டுமா?

இந்தியாவில் மீண்டும் கச்சதீவுப் பிரச்சினையை வைத்து புயலைக் கிளப்பி விட்டிருக்கிறது பாரதீய ஜனதா கட்சி. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்துக் கொடுத்தது காங்கிரஸும் தி.மு.க.வும் தான் என்று குற்றம் சாட்டியிருக்கிறார். இதையடுத்து கச்சதீவை முன்னிறுத்தும் அரசியல் பிரசாரங்கள் தீவிரம் அடைந்திருக்கின்றன.

கச்சதீவு உடன்பாடு 50 ஆண்டுகளுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்டது. அதன் மூலம் கச்சதீவின் மீதான உரிமை முழுமையாக இலங்கைக்கு கிடைத்து விட்டது. இந்தியாவில் நரேந்திரமோடி ஆட்சிக்கு வந்த பின்னரும் கூட, கச்சதீவை மீட்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கச்சதீவை மீட்கக் கோரி, தமிழக அரசின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் ஜெயலலிதா முதலவராக இருந்தபோது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால், அப்போது மத்திய அரசின் சார்பில் முன்னிலையாகிய சட்ட நிபுணர், கச்சதீவு ஒப்பந்தம் முடிந்து போன ஒன்று எனவும், அதனை மீட்பதென்றால் போர் தொடுப்பது தான் ஒரே வழி என்றும் கூறியிருந்தார். அப்போது உயர்நீதிமன்றத்தில் கச்சதீவு ஒப்பந்தம் முடிந்து போன ஒன்று என, மோடி அரசின் சார்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட நிலையில், இன்று அதே மோடி அரசு கச்சதீவு விவகாரத்தைக் கிண்டிக் கிளறிக் கொண்டிருக்கிறது. ஒரு பக்கம், காங்கிரஸும், தி.மு.க.வும் தான், கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்துக் கொடுத்தன என்று மோடி குற்றம் சாட்டுகிறார்.

இன்னொரு பக்கம், கச்சதீவை மீட்போம் என்று பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர் அண்ணாமலை முழங்கிக் கொண்டு திரிகிறார் இவை அனைத்துக்கும் ஒரே காரணம் தேர்தல் தான். இந்திய பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகி ஜீன் வரை நடக்கவுள்ளது.

தமிழகத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி வாக்கெடுப்பு நடக்கிறது. தமிழக தேர்தல் களத்தில் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி, அ.தி.மு.க., நாம் தமிழர் கட்சி ஆகிய மூன்றையும் எதிர்த்து நான்காவதாக பா.ஜ.க. கூட்டணி போட்டியிடுகிறது. எப்படியும் தமிழ் நாட்டில் காலூன்றி விட வேண்டும் என்ற வெறியோடு செயற்படும், பா.ஜ.க. துருப்புச்சீட்டாக கையில் எடுத்திருப்பது தான் கச்சதீவு பிரச்சினை. முடிந்து போன ஒப்பந்தம் என்று கூறி கை கழுவிய கச்சதீவு விவகாரத்தை, இந்தியப் பிரதமர் மோடியும் அண்ணாமலையும், அரசியலாக்கி வருகின்றனர்.

இதன் மூலம், காங்கிரஸ் தி.மு.க. கூட்டணி நாட்டுக்கு துரோகம் இழைத்து விட்டதாகக் காட்டி தேர்தலில் வெற்றி பெறலாம் என்ற முயற்சி செய்கின்றனர். கச்சதீவு பிரச்சினை தமிழ் நாட்டில் முக்கியமான ஒன்றாக இருந்தாலும், வாக்கு வங்கியில் அது தாக்கத்தை ஏற்படுத்துமா? என்ற கேள்வி பலமாக எழுப்பப்படுகிறது.

தமிழகத்தில் எப்போதுமே, இலங்கைத் தமிழர் பிரச்சினை, கச்சதீவு பிரச்சினை என்பன தேர்தல் பிரசாரங்களுக்கு பயன் படுத்தப்பட்டாலும், அவை தேர்தல் முடிவுகளில் தாக்கம் செலுத்துவதில்லை. இது கடந்த தேர்தல்களில் நிரூபணம் ஆகியிருக்கிறது. 2009இல் இலங்கையில் இனஅழிப்பு நடந்து கொண்டிருந்த போதே, அதனை சுட்டிக் காட்டி அ.தி.மு.க. பிரசாரம் செய்த போதும், தமிழகத்தில் காங்கிரஸ் தி.மு.க கூட்டணியே வெற்றி பெற்றது என்பதை மறந்து விடக்கூடாது. அது



போலத் தான், கச்சதீவு விவகாரத்திலும், பழசைக் கிளறி அரசியல் செய்யப் பார்க்கிறார் மோடி. ஆனால் இது இப்போதைய அரசியலுக்கு ஏற்றதாக இருக்குமா என்ற சந்தேகம் உள்ளது.

பா.ஜ.க. இதனை தேர்தலுக்கான அரசியலாகத் தான் முன்னெடுக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஏனென்றால், கச்சதீவை மீட்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக தமிழக அரசியல் கட்சிகள் வலியுறுத்துகின்றன. மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசாங்கம் அதற்கு சாதகமாக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. கச்சதீவை தாரை வார்த்த காங்கிரஸ் கட்சி எவ்வாறோ, அது போலவே கச்சதீவை மீளப் பெறுவதில் அல்லது கச்சதீவில் இந்திய மீனவர்களின் பிரச்சினையை தீர்ப்பதில் பா.ஜ.க. அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இப்போது திடீரென கச்சதீவை மீட்கப் போவதாக அண்ணாமலை போர்க் கொடி உயர்த்தியிருப்பது அப்பட்டமான அரசியல் நலன் கருதிய கோசம் என்பது அனைவருக்கும் தெரியும்.

சரி, கச்சதீவை மீட்போம் என்று வாக்குறுதி கொடுக்கும் அண்ணாமலை, அதனை எப்படி சாதிக்கப் போகிறோம் என்பதை வெளிப்படுத்த முடியுமா? நிச்சயம் முடியாது. இலங்கை அரசாங்கம் இதனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அல்லது இந்தியா அரசாங்கம் போர் தொடுத்து அதனைக் கைப்பற்ற வேண்டும். இந்த இரண்டு வழிகளை விட வேறேந்த வழியும் கிடையாது. கச்சதீவை இலங்கை ஒரு போதும் திருப்பிக் கொடுக்காது. அவ்வாறு கொடுத்தால் இலங்கையில் உள்ளக நெருக்கடிகள் ஏற்படும்.

கச்சதீவின் உரிமை தொடர்பான பல்வேறு குழப்பங்கள் இருகின்றன. அது இலங்கைக்கு உரியது என்று இலங்கை அரசாங்கம் கூறியது. இந்தியாவோ தமக்குச் சொந்தம் என்று கூறியது. இதனால் 1921ஆம் ஆண்டிலேயே இந்த விவகாரம் சர்ச்சையாக மாறியிருந்தது. இலங்கையில் பழைய வரைபடங்களில் கச்சதீவு இருந்ததாக வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன. அதேவேளை, இராமநாதபுரம் மன்னரிடம் அது இருந்ததாக இந்திய அரசின் ஆவணங்கள் கூறுகின்றன. எவ்வாறாயினும், சட்ட ரீதியாக உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை.

1974இல் இந்திராகாந்தி கச்சதீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்து விட்டார். இப்படியான நிலையில், கச்சதீவைத் திருப்பிக் கொடு என்று கொழும்பிடம் போய் நிற்க முடியாது. இலங்கை அரசாங்கம் அதனைத் திருப்பிக் கொடுக்காது ஏனென்றால், இந்தியா கடனாக கொடுத்திருந்தால், அவ்வாறு திரும்பக் கோர முடியும். கச்சதீவில் இலங்கை தனக்கு உரிமை உள்ளதாக பிரச்சினை நிலவிய சூழலில் தான் அதனை இந்தியா கையளித்தது. அவ்வாறான நிலையில் இலங்கை கடனை திருப்பிச் செலுத்துவது போல, கச்சதீவை திருப்பிக் கொடுக்க முன்வரப் போவதில்லை. அதன் மீதான உரிமையை விட்டுக் கொடுத்தால், இலங்கை அரசாங்கம் உள்நாட்டில் கடும் எதிர்ப்புகளை சந்திக்க வேண்டி வரும். அத்தகைய நிலையை எந்த அரசாங்கமும் விரும் பாது. இப்படியான நிலையில், அண்ணாமலை கூறுவது போல, கச்சதீவை மீளப்பெறுவதற்கு இந்தியாவுக்கு உள்ள ஒரே வழி போர் தொடுப்பது தான். இந்தியாவிடம் உள்ள படை பலத்தைக் கொண்டு கச்சதீவை மாத்திரமல்ல, முழு இலங்கையையும் கூட கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடலாம். ஆனால் இந்தியாவினால் அவ்வாறு செய்ய முடியாது. சர்வதேச உடன் படிக்கைகளை மீறி இந்தியா அவ்வாறு போர் தொடுத்தால், அது சர்வதேச அளவில் இந்தியாவின்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



பெயரைக் கெடுக்கும். இன்னொரு பக்கத்தில், அவ்வாறான போர் நடவடிக்கை இலங்கையிடம் இருந்து இந்தியாவை பிரித்து விடும். அதனால் ஏற்படக் கூடிய இடைவெளி வரலாற்றில் நிரப்ப முடியாதளவுக்கு மோசமானதாக இருக்கும். எனவே, என்ன தான் பா.ஜ.கவினர் குத்தி முறிந்தாலும் கச்சதீவு விவகார த்தில் அவர்கள் எதையும் செய்யப் போவதும் இல்லை. செய்யவும் முடியாது. தேர்தலுக்கான இந்த பிரசாரங்கள் எல்லாம் அடுத்த சில வாரங்களில் அடங்கிப் போகும்.



# ஜே.வி.பி. பதில் கூறுமா?

அனுரகுமார கவர்ச்சியாகப் பேசுகிறார். மேடையைத் தனது பேச்சினால் கட்டிப் போடவல்ல ஒரு பேச்சாளராக அவர் தெரிகிறார். இனப்பிரச்சினை தொடர்பாக, இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அவர் கவர்ச்சியாகப் பேசுகின்றார். கனடாவிலும் அவர் அப்படித் தான் பேசினார். யாழ்ப்பாணத்திலும் அவர் அப்படித் தான் பேசினார். ஆனால் அவர் இதுவரை பேசிய அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால், ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது.

என்னவெனில், அவர் இனப்பிரச்சினையை, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை, எல்லாவற்றையும் மனிதாபிமானக் கண் கொண்டு தான் பார்க்கின்றார். மாறாக அவற்றுக்குரிய அரசியல் அடர்த்தியோடு, அரசியல் பரிமாணத்தோடு, அவற்றை விளங்கி வைத்திருக்கிறாரா என்று கேட்கத்தக்க விதத்தில் தான் இனப் பிரச்சினை தொடர்பான அவருடைய கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

அவர் மொழிப் பிரச்சினை பற்றிப் பேசுகிறார். அதைத் தீர்க்க வேண்டும் என்று பேசுகிறார். மரபுரிமைச் சொத்துகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளைப் பற்றிப் பேசுகிறார். அதைத் தீர்க்க வேண்டும் என்று கூறுகிறார். ஒரு காலம் தன்னுடைய சிறு பிராயத்தில் தன்னுடைய கிராமத்தில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இன பேதம் இன்றி ஒன்றாக வாழ்ந்ததைக் கூறுகிறார். சிங்கள மக்கள் மத்தியில் இனவாதம் ஒரு மக்கள் மயப்பட்ட விடயம் அல்ல என்றும் கூற வருகிறார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக 13வது திருத்தத்தை அவர் இன்னமும் வெளிப்படையாக உறுதியாக ஆதரிக்கும் ஒரு நிலைப்பாட்டுக்கு வரவில்லை. ஆனால் அதைப் பரிசீலிக்கும் ஒரு நிலைப்பாட்டுக்கு ஜேவிபி வந்து விட்டது. இவைதான் அவர் பேசியவற்றின் சாராம்சம்.

தமிழ் லிபரல் ஜனநாயகவாதிகளுக்கு அவை உற்சாகமூட்டக் கூடிய கருத்துக்கள். இனப்பிரச்சினை தொடர்பில் ஒரு புதிய வெளிச்சம் தோன்றியிருப்பதாக அவர்கள் கொண்டாடுகிறார்கள். ஆனால் தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து பார்த்தால், அனுராவிடம் ஆழமான சில கேள்விகளைக் கேட்க வேண்டியிருக்கிறது.

கேள்வி ஒன்று, இலங்கைத்தீவு பல்லினத் தன்மை மிக்கது என்பதனை ஜேவிபி ஏற்றுக் கொள்கின்றதா?

ஆயின் இரண்டாவதாக, தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஜேவிபி ஏற்று கொள்கின்றதா?

அவ்வாறு தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால், ஒரு தேசிய இனத்திற்குள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜேவிபி தயாரா?

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான ஒரு தீர்வு என்று பார்க்கும் பொழுது, தமிழ் மக்கள் இப்பொழுது கூட்டாட்சியைத் தான் கேட்கின்றார்கள். உலகம் முழுவதிலும் உயர்ந்த ஜனநாயகங்களில் கூட்டாட்சி ஒரு வெற்றிகரமான ஆட்சி முறைமையாகக் காணப்படுகின்றது. ஜேவிபி தமிழ் மக்களுக்கு ஒரு கூட்டாட்சி தீர்வைத் தரத் தயாரா?

இதைத் தமிழ் மக்களுக்கான தீர்வு என்பதனை விடவும், இலங்கை முழுவதுக்குமான ஒரு தீர்வு என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக் கொள்ளும் ஒரு கட்சியானது அந்த அடிப்படையில், பல்லின் பல் சமய இரு மொழிப் பண்பைப் பேணும் விதத்தில் ஒரு தீர்வைதான் முன்வைக்க வேண்டும். உலகில் பல்லினத்தன்மை மிக்க நாடுகளில் பழமொழி பல மதங்கள் பயிலப்படும் நாடுகளில்` கூட்டாட்சி அதாவது சமஸ்டி ஒரு வெற்றிகரமான ஆட்சி முறையாக நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. எனவே சமஸ்ரித் தீர்வு எனப்படுவது தமிழ் மக்களுக்கு உரியது என்பதை விடவும், இலங்கைத் தீவை ஒரு தேசமாகக் கட்டி எழுப்புவதற்கானது என்பது தான் மிகச் சரியான விளக்கம்.

நாலாவது கேள்வி, 2009க்கு முன்பு ஆயுத மோதல்களின் போது ஜேவிபி போரை ஆதரித்தது. போரில் ஈடுபடும் படை வீரர்களை ஆதரித்தது. படைத்தரப்புக்கு ஆட்சேர்த்துக் கொடுத்தது. அது தொடர்பாக தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கத் தயாரா?



ஐந்தாவது கேள்வி இந்திய இலங்கை உடன்படிக்கையின் மூலம் இணைக்கப் பட்ட வடக்கையும் கிழக்கையும் ஒரு வழக்கின் மூலம் பிரித்தது ஜேவிபி. அதாவது தமிழ் மக்களின் தாயகத்தை சட்ட ரீதியாகப் பிரிக்க முற்பட்ட ஒரு கட்சி. அவ்வாறு தமிழ் மக்களின் தாயகத்தைச் சட்ட ரீதியாகப் பிரித்தமைக்காக தமிழ் மக்களிடம் ஜேவிபி மன்னிப்புக் கேட்குமா? இதை ஐநா தீர்மானங்களின் வார்த்தைகளில் கேட்டால், ஜேவிபியானது, இறந்த காலத்துக்குப் பொறுப்புக் கூறுமா? இறந்த காலத்தில் அது தமிழ் மக்களுக்கு எதிராக எடுத்த நிலைப்பாடுகளுக்கும், தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுத்த செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறுமா?

ஐந்தாவது கேள்வி, ஜேவிபியின் முதலாவது கிளர்ச்சியின் போது அது இந்தியத் தமிழர்களை குறிப்பாக, மலையகத் தமிழர்களை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கருவியாகக் காட்டியது. இப்பொழுதும் ஜேவிபி அதே நிலைப்பாட்டோடு தான் காணப்படுகின்றதா? அது தொடர்பாக மலையக மக்களிடம் ஜேவிபி மன்னிப்புக் கேட்குமா ?

மேற்கண்ட கேள்விகள் தமிழ் மக்களால் அனுரகுமரவிடம் பகிரங்கமாகக் கேட்கப் பட வேண்டியவை. தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்தால், தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான கூட்டுரிமைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். அனுரகுமார உதிரியாகப் பேசுகின்ற மொழிப் பிரச்சினை் வழிபாட்டுப் பிரச்சினை காணிப்பிரச்சினை கல்விப் பிரச்சினை...முதற்கொண்டு பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள் வரை அனைத்தும் அந்தக் கூட்டு உரிமைகளுக்குள் அடங்கும்.

தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமக்குரிய கூட்டு உரிமைகளை பாதுகாப்பதற்கான ஒரு தீர்வைதான் கேட்கின்றார்கள். எனவே கோட்பாட்டு ரீதியாகவும் அரசறிவியல் அர்த்தத்திலும் ஜேவிபி முதலில் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்கிறதா இல்லையா என்பதனைத் தெளிவாகக் கூற வேண்டும்.

இனப்பிரச்சனை ஒரு மனிதாபிமானப் பிரச்சினை அல்ல. முதலில் இனப்பிரச்சினை என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இனப் பிரச்சினை எனப்படுவது, இலங்கைத்தீவின் பல்லினத் தன்மையை பெரிய இனமாகிய பெரிய மதமாகிய சிங்கள பௌத்தர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தமை தான். அதனால் தமிழ் மக்கள் ஒரு தேசமாக வாழ்வதற்குரிய அடிப்படைகளை அவர்கள் அழிக்க முற்பட்டார்கள். தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கட்டியெழுப்பும் மொழி, நிலம், பண்பாடு பொருளாதாரம் போன்ற அம்சங்களைக் குறி வைத்துத் தாக்கினார்கள். தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பதற்குரிய அடிப்படைகளை அழிப்பது தான்.

எனவே இனப்பிரச்சினை தோன்றியது எங்கிருந்து என்றால், இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக் கொள்ள மறுப்பதில் இருந்து தான். அதற்குத் தீர்வும் எங்கிருந்து தொடங்க வேண்டும் என்றால், இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை ஏற்றுக் கொள்வதில் இருந்து தான்.


இதைத் தமிழ் நோக்கு நிலையில் இருந்து சொன்னால் தமிழ் மக்களை ஒரு தேசமாக ஏற்றுக் கொள்வதில் இருந்து தான் அதைத் தொடங்கலாம். ஆனால் ஜேவிபி அவ்வாறான அரசறிவியல் ஆழத்துக்குள் இறங்கத் தயார் இல்லை. தமிழ் மக்களை ஒரு தேசமாக அங்கீகரிப் பதன் மூலம், சமஸ்ரித் தீர்வு ஒன்றை ஏற்றுக் கொள்வதன் மூலம், தென்னிலங்கையில் தங்களுக்கு கிடைக்கக்கூடிய சிங்கள பௌத்த வாக்குகளை இழப்பதற்கு அவர்கள் தயார் இல்லை.

அதேசமயம் தமிழ் வாக்குகள் அவர்களுக்குத் தேவை. அனுரகுமார கூறுகிறார், நான் வாக்கு வேட்டைக்கு வரவில்லை, நான் தீர்வைத் தருகிறேன் வாக்கைத் தாருங்கள் என்று வியாபாரம் செய்வதற்கு வரவில்லை... என்று.

கேட்க அது கவர்ச்சியாக இருக்கலாம். ஆனால் இனப்பிரச்சினைக்கு ஜேவிபியின் தீர்வு என்ன என்பதனை வெளிப்படையாகச் சொல்வதில் இருந்து அவர் தப்ப முயற்சிக்கின்றார். தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் பல தசாப்தங்களுக்கு முன் இருந்த நல்லுறவை மீளக்கட்டி எழுப்பப் போவதாகக் கூறுகிறார். அந்த நல்லுறவு எங்கே பாதிப்படைந்தது? தமிழ் மக்கள் ஒரு தேசமாக வாழ்வதற்குரிய அடிப்படைகளை அழிக்க முற்பட்ட பொழுது தானே? அந்த நல்லுறவை எங்கிருந்து கட்டி எழுப்பலாம்? தமிழ் மக்களை ஒரு தேசமாக ஏற்றுக் கொள்வதில் இருந்து தானே? ஆனால் ஜேவிபி அதை வெளிப்படையாகச் சொல்ல தயாரில்லை.

இந்த விடயத்தில் மஹிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினைக்கு 13 பிளஸ் தீர்வு என்று வெளிப்படையாகக் கூறி வருகிறார். ரணில் விக்கிரமசிங்க மாகாண சபைகள் தான் தீர்வு என்கிறார். ஆனால் ஜேவிபி தீர்வை வெளிப்படையாகப் பேசத் தயங்குகின்றது.

அதாவது ஜேவிபி வெளிப்படையான, அரசியல் அடர்த்தி மிக்க, வார்த்தைகளுக்கு ஊடாக கதைப்பதைத் தவிர்த்து, மழுப்பலான, பொத்தாம் பொதுவான, சமூகநீதி மற்றும் மனித உரிமைகளின் பாற்பட்ட வார்த்தைகளுக்கு ஊடாகப் பேச விளைகின்றது. அந்த அமைப்பில் இருந்து விலகிய ஒருவர் எழுதிய நாட் குறிப்பில் மகிந்த ராஜபக்ஷ வெளிப்படையாகத் தெரியும் ஓர் இனவாதி. ஆனால் ஜேவிபியோ சமூக நீதியின் பின் பதுங்கும் ஓர் இனவாதி என்று கூறியிருப்பது தவறு என்பதனை நிரூபிக்கும் விதத்தில் ஜேவிபி இக்கட்டுரையில் முன் வைக்கப்படும் பகிரங்க கேள்விகளுக்கு பதில் கூறுமா?

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சூடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# காஸாவில் போர் தொடங்கி 6 மாதங்கள் நிறைவு:- ஹமாஸை அழிப்பதில் இஸ்ரேல் முன்னேறியுள்ளதா?

ஹமாஸ் ஆயுதக்குழுவினர் அக்டோபர் 7 அன்று காஸா வழியாக இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி சுமார் 1200 பேரைக் கொன்றனர். நூற்றுக் கணக்கான மக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்தனர். இத் தாக்குதல் நடந்து ஆறு மாதங்களாகி விட்டன.

இதற்குப் பதிலடியாக பணயக் கைதிகளை ஹமாஸ் பிடியிலிருந்து விடுவித்து அவர்களை வீடு திரும்பச் செய்வோம் என்றும் ஹமாஸை அழித்து ஒழிப்போம் என்றும் இஸ்ரேல் உறுதியளித்தது.இஸ்ரேல் -ஹமாஸ் இடையே தொடரும் போரில், குறைந்தது 33,000 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாகவும் காஸா பகுதியின் பெரும்பகுதி அழிக்கப்பட்டதாகவும். ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் ஆயுதக்குழுவின் ஆயிரக்கணக்கானோரைக் கொன்றதுடன், காஸாவில் பூமிக்கடியில் ஹமாஸ் தாக்குதல்களை நடத்தப் பயன்படுத்தும் பரந்த சுரங்கப் பாதை வலையமைப்பை அழித்ததாகவும் இஸ்ரேல் கூறுகிறது.

பிபிசி வெரிஃபை (BBC Verify) இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளின் அறிக்கைகள் மற்றும் சமூக ஊடக பதிவுகளை ஆய்வு செய்தது. மேலும், இஸ்ரேலின் கூற்றுகளுக்குப் பின்னால் உள்ள ஆதாரங்களை ஆய்வு செய்தது.

### எத்தனை ஹமாஸ் தலைவர்கள் இறந்தார்கள்?

அக்டோபர் 7ஆம் தேதிக்கு முன்னர் காஸாவில் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் சுமார் 30 ஆயிரம் பேர் இருந்ததாக, இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் தளபதிகளை மேற்கோள் காட்டி கூறப்பட்டது.

ஹமாஸின் மிகப்பெரிய தலைவர் இஸ்மாயில் ஹனியா உட்பட பல மூத்த அரசியல் பிரமுகர்கள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். ஆனால் அதன் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் பலர் காஸாவிற்குள் இருப்பதாக நம்பப்படுகிறது.

போர் தொடங்கியதில் இருந்து சுமார் 13 ஆயிரம் ஹமாஸ் ஆயுதக்குழுவினரை கொன்றுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் சமீபத்திய அறிக்கையில் தெரிவித்துள்ளது. இருப்பினும், இந்த தரவு எவ்வாறு சேகரிக்கப்பட்டது என்பதை இஸ்ரேல் தெரிவிக்கவில்லை. கொல்லப்பட்டதாகக் கூறப்படும் ஹமாஸ் தலைவர்களின் பெயர்களையும் இஸ்ரேல் வெளியிட்டது.

அக்டோபர் மாதம் முதல் இது போன்ற 113 பேரின் பெயர்களை இஸ்ரேல் வெளியிட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் போரின் முதல் மூன்று மாதங்களில் உயிரிழந்தனர். இதனுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு மார்ச் வரை காஸாவில் எந்த மூத்த ஹமாஸ் தலைவரும் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவிக்கவில்லை.

மார்ச் 26 அன்று, ஹமாஸின் ரஜாணுவப் பிரிவின் துணைத் தளபதி மர்வான் இசாவை கொன்றதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

இஸ்ரேலில் மிகவும் தேடப்படும் நபராகக் கருதப்படும் இசா, இப்போர் தொடங்கியதிலிருந்து கொல்லப்பட்ட ஹமாஸின் மூத்தத் தலைவர் ஆவார். அவர் கொல்லப்பட்டதாக நம்புவதாக அமெரிக்கா கூறியது. ஆனால் ஹமாஸ் இசாவின் மரணத்தை உறுதிப்படுத்தவில்லை.



கொல்லப்பட்ட மூத்த ஹமாஸ் தலைவர்களின் பெயர்களை இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டது. ஆனால், இவர்கள் ஹமாஸின் உறுப்பினர்களா இல்லையா என்பதை உறுதிப்படுத்த முடியாது. இப்பட்டியலில் ஹமாஸ் குழுவில் அல்லாதவர்கள் சிலரின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. அவர்களுள் ஒருவர் ஒருவர் முஸ்தஃபா துரையா. இவர், தெற்கு காஸாவில் சுயாதீன பத்திரிகையாளராக பணி புரிந்து கொண்டிருந்த போது, ஜனவரி மாதம் அவரது வாகனம் இஸ்ரேலிய தாக்குதலுக்கு உள்ளானது.

மேலும், இப்பட்டியலில் சிலரது பெயர்கள் இருமுறை குறிப்பிடப்பட்டிருந்தன. அதனால், அவர்களின் பெயர்களை மொத்த எண்ணிக்கையில் சேர்க்கவில்லை. காஸாவிற்கு வெளியே உள்ள ஹமாஸின் அரசியல் தலைவரான சலே அல்-அரூரி இந்த ஆண்டு ஜனவரியில் பெய்ரூட்டில் நடந்த குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார். இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் பொறுப்பேற்றது. எனினும், யாஹ்யா சின்வார் உட்பட காஸாவில் உள்ள பல முக்கிய ஹமாஸ் தலைவர்கள் இன்னும் உயிருடன் இருப்பதாக நம்புவதாக நாங்கள் பேசிய நிபுணர்கள் தெரிவித்தனர்.

ஹமாஸின் உயர்மட்ட தலைவர்களை இஸ்ரேல் இராணுவத்தால் அடைய முடியவில்லை என, சர்வதேச நெருக்கடிக் குழுவில் இஸ்ரேல் -பாலஸ்தீன விவகாரங்கள் குறித்த மூத்த ஆய்வாளர் மைரவ் சோன்ஸ்சீன் கூறினார்.

ஹமாஸின் கட்டுப்பாட்டில் இருந்து அப்பிரதேசத்தை விடுவிப்பதையும் இஸ்ரேலால் இன்னும் சாதிக்க முடியவில்லை' என்று அவர் கூறுகிறார்.

### காஸாவில் எத்தனை பணயக் கைதிகள் எஞ்சியுள்ளனர்?

இஸ்ரேலின் அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்களின்படி, அக்டோபர் 7 ஆம் தேதி 253 பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். இவர்களுள், தனித்தனி ஒப்பந்தங்கள் அல்லது கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தங்களின் கீழ் 109 பேர் விடுவிக்கப்பட்டனர். மூன்று பேரை இஸ்ரேல் இராணுவம் நேரடியாக இராணுவ நடவடிக்கை மூலம் காப்பாற்றியது. பணயக் கைதிகள் 11 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. இராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியாக கொல்லப்பட்டதாக, இஸ்ரேல் இராணுவம் ஒப்புக் கொண்ட மூவரும் இவர்களில் அடங்குவர். பணயக்கைதிகளாக பிடிக்கப் பட்டவர்களுள் உயிருடன் உள்ளவர்களில், இளையவரின் வயது 18 என்றும், மூத்தவரின் வயது 85 என்றும் கூறப்படுகிறது.

மீதமுள்ள 130 பணயக்கைதிகளில், இஸ்ரேலின் கூற்றுப்படி, 34 பேர் இறந்துள்ளனர். இஸ்ரேல் இராணுவத்தின் வான்வழித் தாக்குதல்களால் கொல்லப்பட்ட பணயக்கைதிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதாக ஹமாஸ் கூறுகிறது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்த முடியாது.

ஹமாஸால் பிடிக்கப்பட்ட இரண்டு இளம் பணயக்கைதிகள் ஏரியல் மற்றும் ஃபிர். இருவரும் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட நேரத்தில், முறையே 4 வயது மற்றும் 9 மாதங்கள் மட்டுமே ஆகியிருந்தது. இருவரும் இப்போது இவ்வுலகில் இல்லை என்று கூறப்படுகிறது. ஆனால், அவர்களின் மரணம் உறுதி செய்யப்படவில்லை.

### ஹமாஸின் சுரங்கப்பாதை வலையமைப்பு எந்தளவுக்கு அழிப்பு?

ஹமாஸை அழிப்பதாக உறுதியளித்ததோடு, காஸாவில் பூமிக்கடியில் அக்குழுவினரின் மிகப் பெரிய சுரங்கப்பாதை வலையமைப்பையும் அழிப்பதாக இஸ்ரேல் உறுதியளித்தது.

ஹமாஸ் இந்த சுரங்கப்பாதைகள் வழியாக உணவு மற்றும் மக்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வது வழக்கம். இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் ஜொனாதன் கான்ரிகஸ், 'காஸா முனையை பொதுமக்களுக்கான ஒரு அடுக்கு என்றும், மற்றொரு அடுக்கு ஹமாஸ் என்றும் நினைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் ஹமாஸ் உருவாக்கிய அந்த இரண்டாவது அடுக்கை அடைய முயற்சிக்கிறோம்' என கடந்த அக்டோபரில் தெரிவித்தார்.

காஸாவின் சுரங்கப்பாதை வலையமைப்பு சுமார் 500 கிலோமீட்டர் வரை நீண்டுள்ளது என்று ஹமாஸ் முன்னதாக கூறியிருந்தது. இருப்பினும், இந்த தகவலை சுயாதீனமாக சரிபார்க்க வழி இல்லை. இதுவரை எத்தனை சுரங்கப்பாதைகள் அழிக்கப்பட்டுள்ளன, அவை மொத்த எண்ணிக்கையில் எவ்வளவு என்று இஸ்ரேல் இராணுவத்திடம் கேட்டோம். அதற்கு, 'காஸாவில் உள்ள பயங்கரவாதக் கட்டமைப்புகளை பெருமளவில் அழித்துள்ளதாக' இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.

ஹமாஸ் சுரங்கப்பாதைகள் கண்டு பிடிக்கப்பட்டதற்கான ஆதாரங்களை இஸ்ரேல் இராணுவம் பல சந்தர்ப்பங்களில் வெளியிட்டுள்ளது. எடுத்துக் காட்டாக, காஸா நகரில் உள்ள அல்-ஷிஃபா மருத்துவமனையின் அடியில் உள்ள சுரங்கப்பாதையின் ஒரு பகுதியின் வீடியோ காட்சிகளை நவம்பரில் இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டது. இஸ்ரேல் இராணுவத்தின்படி அது ஹமாஸின் கட்டளை மையமாக பயன்படுத்தப்பட்டது.



இஸ்ரேல் இராணுவம் இதுவரை எத்தனை நீண்ட சுரங்கப் பாதைகளை கண்டறிந்துள்ளது என்பதை அறிய, காஸாவின் சுரங்கப்பாதைகள் தொடர்பாக அக்டோபர் 7, 2023 மற்றும் மார்ச் 26, 2024 வரை அதன் சமூக ஊடக தளங்களிலும், டெலிகிராமிலும் வெளியிடப்பட்ட செய்திகளை பிபிசி சரிபார்த்தது. இதில், 198 செய்திகளில், சுரங்கப் பாதைகள் கண்டு பிடிக்கப்பட்டது தொடர்பான தகவல்கள் இருந்தன. மற்றொரு 141 செய்திகள், சுரங்கப்பாதையை அழித்தது அல்லது செயலிழக்கச் செய்தது குறித்துக் கூறுகின்றன.

இந்த செய்திகளில் பெரும்பாலானவை சுரங்கப்பாதைகளின் இருப்பிடம் தொடர்பான துல்லியமான விவரங்களை வழங்கவில்லை. எனவே, இஸ்ரேல் இராணுவம் எத்தனை சுரங்கங்களை கண்டு பிடித்தது அல்லது அழித்தது என்பதை உறுதிப்படுத்த முடியாது.

காஸாவில் பூமிக்கடியில் உள்ள இந்த வலைப்பின்னல் அமைப்பிலான சுரங்கப்பாதை பாதைகளில் வெவ்வேறு அளவுகளில் அறைகள். அத்துடன் சுரங்கப்பாதை மேற்பரப்பை சந்திக்கும் ஒரு புள்ளி உட்பட பல கூறுகளால் ஆனது.

நாங்கள் பகுப்பாய்வு செய்த செய்திகளில், 36 செய்திகள், மொத்தம் 400 சுரங்கவாயிற்குழிகள் மீதான தாக்குதல்களைக் குறிப்பிட்டுள்ளது. இருப்பினும், இஸ்ரேலின் ரீச்மேன் பல்கலைக் கழகத்தின் பேராசிரியரும் சுரங்கப் பாதை வழி போர்களில் நிபுணருமான டாக்டர். டாப்னே ரிச்மண்ட், ஒரு சுரங்க வாயிற் குழியை சுரங்கப் பாதையுடன் ஒன்றாக தொடர்புப்படுத்துவது தவறாக வழிநடத்தும் என்று கூறுகிறார். இந்த சுரங்க வாயிற் குழிகளை அழித்த பிறகும் சுரங்கப்பாதை வலையமைப்பு அப்படியே உள்ளது என்று அவர் கூறுகிறார். இந்தப் போரில் சுரங்கப்பாதைகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டதாக நான் நினைக்கவில்லை,' என்று அவர் கூறினார்.

### பாலஸ்தீனர்களுக்கு ஏற்பட்ட இழப்பு

காஸாவில் வாழும் பாலஸ்தீனர்கள் இஸ்ரேலின் போர் நோக்கங்களுக்காக பெரும் விலை கொடுக்க வேண்டியதாயிற்று. ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகத்தின் கூற்றுப்படி, இஸ்ரேலிய தாக்குதல்களில் இதுவரை 33 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் 5 அன்று அமைச்சகம் வெளியிட்ட தரவின்படி, கொல்லப்பட்டவர்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்பதைக் காட்டுகிறது. ஹமாஸ் இலக்குகளை அழிக்க இஸ்ரேலிய படைகளின் முயற்சிகளுக்கு மத்தியில் பலர் இடம் பெயர்ந்துள்ளனர் அல்லது வீடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, காஸாவில் உள்ள 17 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குத் தப்பிச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். குடியிருப்புப் பகுதிகள் பாழடைந்து, பரபரப்பாக இருந்த சாலைகள் தற்போது ஒன்றும் இல்லாமல் ஆகியுள்ளன.

கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அக்டோபர் 7 முதல், காஸாவின் 56 சதவீத கட்டடங்கள் சேதமடைந்துள்ளன அல்லது முற்றிலும் இடிக்கப் பட்டுள்ளன என்று செயற்கை'கோள் தரவுகளின் பகுப்பாய்வு காட்டுகிறது. போர் தொடங்கி ஆறு மாதங்களுக்குப் பிறகும், இஸ்ரேல் தனது போர் நோக்கங்களை அடைந்து விட்டதா இல்லையா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. நன்றி:- பிபிசி

# ரணில் விக்கிரமசிங்க:- One Man Government

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



இலங்கை அரசியலில் One Man Government ஆகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. மட்டுமல்ல அரசியல் பொருளாதாரம் பண்பாடு என அனைத்தையும் தீர்மானிக்கும் ஒரே ஆளாகியுள்ளார். ரணில் என்ன நினைக்கிறாரே அதுவே நடக்கிறது. அதுவே நடக்கக் கூடிய சூழலும் உள்ளது. அவரை மீறி எதுவும் இல்லை என்ற நிலை.

இதைக் கட்டுப்படுத்தவோ இடையீடு செய்யவோ முடியாமல் எதிர்க்கட்சிகள்



படுத்து விட்டன. எதிர்ப்பு அரசியல் என்பது காணாமலே போய் விட்டது. அங்கங்கே மெல்லிய தொனியில் அனுங்கலாகக் கேட்கும் குரலைத் தவிர வேறெதுவும் இலங்கையில் இல்லை.

நெடுங்காலமாக இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்தி வந்த ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் உடைந்து சிதறிச் சிறுத்து விட்டன. ஐ.தே.க உடைந்து ஒரு பகுதி ஐக்கிய மக்கள் சக்தி என சஜித் பிரேமதாசவின் தலைமையில் இயங்குகிறது. மற்றப்பகுதி ரணில் விக்கிரமசிங்கவோடு. சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுண்டு ஒரு அணி பொதுஜன பெரமுன என ராஜபக்ஸக்களின் செல்வாக்கோடு செயற்படுகிறது. மற்றது மைத்திரிபால சிறிசேனவின் கீழ். அதிலும் ஒரு துண்டு தனியாகச் செயற்படவுள்ளதாக சொல்லிக் கொண்டிருக்கிறது.

ஆயுதப்போராட்ட அரசியல் தேசிய நீரோட்ட அரசியல் என்ற பாராளுமன்ற ஜனநாயக அரசியல் ஆகிய இரண்டு வழி அனுபவங்களையும் கொண்ட ஜே.வி.பி ஐம்பது ஆண்டுகளைக் கடந்தும் குழந்தையாகத் தான் தவழ்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் அதனால் எழுந்து நடக்க முடியவில்லை.

தமிழ்த் தரப்பின் அரசியற் குரலைக் காணவே இல்லை. அது ஆழக் கிணற்றுக்குள்ளிருந்து ஒலிப்பதைப் போல யாருக்குமே பெரிதாகக் கேட்பதில்லை. அதற்குள் ஆயிரத்தெட்டுப் பிரிவினைகள். ஒரு காலம் ஈழ விடுதலை இயக்கங்கள் பெருகிக் கிடந்ததைப் போல இப்பொழுது தமிழ்த் தேசியக் கட்சிகள் பெருகிக் கிடக்கின்றன.

ஈழவிடுதலை இயக்கங்களிலிருந்து பெற்ற அனுபவமோ என்னவோ தெரியவில்லை. இப்பொழுது தமிழ் மக்களும் தமிழ் அரசியற் குரலைப் பெரிதாகக் கவனத்திற் கொள்வதில்லை. அதற்கு உருவேற்றுவதற்குச் சிலர் உடுக்கடிகாரர்களைப் போல எப்படியெல்லாமோ முயற்சிக்கிறார்கள். ஆனால் சனங்கள் சன்னதங் கொள்வதைக் காணோம். பட்டறிவாக இருக்கலாம்.

பதிலாகப் பலரும் தம்மை விட்டாற் காணும் என்ற நிலையில் இனஇ மத பேதமின்றி நாட்டை விட்டுத் தப்பியோடுகிறார்கள். உயர் பதவியிலுள்ளவர்கள் கூட பதவியாவது மண்ணாவது என அரசு வழங்கியிருக்கும் ஐந்தாண்டுகள் ஊதியமற்ற விடுமுறையைப் பயன்படுத்திக் கொண்டு வெளியே பறக்கிறார்கள். போர்க் காலத்தில் நாட்டை விட்டு வெளியேறியோரின் தொகையை விட இப்பொழுது வெளியேறுவோரின் தொகை அதிகம் என்று சொல்கின்றன புள்ளி விவரங்கள்.

உண்மையும் அது தான். கடவுச் சீட்டுப் பெறும் அலுவலகமும் வெளி நாட்டுத் தூதுவரகங்களும் சனங்களால் நிரம்பி வழிகின்றன. எஞ்சியிருப்போரில் பலரும் இனியும் காலத்தைக் கடத்த முடியாது என்று இலங்கைத் தேசிய அரசியலில் கலந்தும் கரைந்தும் போகிறார்கள். இதனால் தான் அங்கயன் ராமநாதன் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) டக்ளஸ் தேவானந்தா போன்றோர் அதிகூடிய வாக்குகளைப் பெறுகிறார்கள்.

நாடு யுத்த நெருக்கடியிலிருந்து மீண்டு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் காரணம் தேசியப் பிரச்சினைகளில் ஒன்றான இனவாதம் என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதை விட்டுத் தொலைப்பதற்கு யாரும் தயாரில்லை.

அரசியல் கட்சிகளும் சரி அரசியல் ஆய்வாளர்கள் பத்தியாளர்கள் ஊடக வியலாளர்கள் மதத் தலைவர்கள் மத பீடங்கள் புத்திஜீவிகள் அறிவு மையங்கள் விளிம்புகள் என எல்லா இடங்களிலும் எல்லாத் தரப்புகளிலும் இனவாதம் தாராளமாக ஊறிப்போய்க் கிடக்கிறது. மூன்றுவேளை சாப்பாட்டைப் போல இனவாதம் பலருக்கும் அவசியமான பழக்கமான ஒன்றாகி விட்டது. அதை விட்டால் உயிரே போய் விடும் என்று எண்ணுகிறார்கள்.

சமாதானத்தை விட அமைதியை விட சுபீட்சமான எதிர்காலத்தை விட அந்நிய தலையீடுகள் ஆக்கிரமிப்புகளை விஇ பிற சக்திகளிடம் முழுந்தாழில் நின்று கையேந்துவதை விட நாடு கடனில் மூழ்குவதை விட அரை வயிறு பட்டினி கிடப்பதை விட இனவாதம் ருசிக்கிறது எல்லோருக்கும்.

இந்த மாதிரி மூடத்தனம் வேறில்லை. என்ன தான் சொல்லுங்கள். நாங்கள் மூடர்களாகவும் முட்டாள்களாகவும் இருந்து விட்டுப் போகிறோம். நம்முடைய முயலுக்கு ஒன்றரைக் கால்தான் என்பதிலிருந்து எவரும் முன்னகரத் தயாரில்லை. இந்தப் பைத்தியக்காரத் தனத்துக்கு எந்த வைத்தியமுமில்லை.

இந்தச் சூழலில் தான் தான் ஒரு சிறந்த ஜனநாயகவாதி. அரசியல் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க வந்த ஆபத்பாந்தகர். இனவாதத்துக்கு எதிரான பேர்வழி. அமைதியின் நேசன். மூழ்கும் நாட்டை மீட்க வந்த ஒரேயொரு மாலுமி என்று தோற்றம் காட்டுகிறார் ரணில் விக்கிரமசிங்க.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியிலிருக்கும் ரணில் இன்று சர்வ வல்லமை பொருந்திய பெருந் தலைவர். 50 ஆண்டுகளுக்கு மேலான அரசியல் அனுபவம் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தாராளமாகக் கை கொடுக்கிறது. சர்வதேச நாடுகளின் ஆதரவு ஒரு பக்கம் அவருக்குக் கிடைக்கிறது என்றால் சர்வதேச நாடுகளை லாவகமாகக் கையாளும் அவருடைய கலை இன்னொரு பக்கமாகக் கை கொடுக்கிறது.

இதனால் ரணில் விக்கிரசிங்கவை எவராலும் எதுவும் செய்ய முடியவில்லை. பலருக்கும் அவர் மீது பொருமல்கள் உண்டு. ஆனால் அடுப்படிக்குள் புகைவதைப் போல அடிவயிற்றில் புகைவதோடு எல்லாம் அடங்கிப் போகின்றன.

அறுதிப் பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் வைத்திருக்கின்ற ராஜபக்ஸக்களின் 'பொது ஜன பெரமுன' கூட ரணிலை எதுவும் செய்ய முடியாதுள்ளது. மட்டுமல்ல ரணிலுக்குச் சவால் விட்டுக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கி ஒரு பெரும் அணியாகத் திரண்டிருக்கும் சஜித்தின் கூட்டணியினாலும் ரணிலை ஆட்ட முடியவில்லை. இவ்வளவுக்கும் இந்தச் சீமான் ஒரு வாக்கைக் கூட தான் இப்பொழுது வகிக்கும் பதவிக்காகப் பெற்றவரில்லை. ஏன் இதற்காக நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலிலேயே போட்டியிட்டதுமில்லை. ஆனால் அவரே நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி — நாட்டின் அதிபராகி ஆட்டுவிக்கிறார்.

இலங்கை அரசியல் சாசனத்தின்படி ஜனாதிபதிக்கே உச்ச அதிகாரமுண்டு. அமைச்சரவையும் பாராளுமன்றமும் முப்படைகளும் என முழு நாடுமே ஜனாதிபதிக்குக் கீழே தான்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தனக்கு எதிரான திசையிலிருந்தவர்களை வைத்தே வெற்றிகரமாக ஆட்சியை நடத்துகிறார். அமைச்சரவையில் உள்ள அத்தனை பேரும் எதிரணியைச் சேர்ந்தவர்கள். இருந்தாலும் ரணிலுக்குக் கட்டுப்பட்ட பெட்டிப் பாம்புகளாகவே இருக்கின்றனர். இதற்கெல்லாம் காரணம் இவர்கள் அனைவரும் பலவீனமான நிலையில் கடந்த காலத்தில் தவறுகளை இழைத்தவர்களாக இருப்பதேயாகும். இந்தத் தவறுகளிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால் தவிர்க்க முடியாமல் ரணிலை ஆதரித்தே ஆக வேண்டும். அவருடைய கால்களைப் பிடித்தே ஆக வேண்டும். ராஜபக்ஸக்களைக் காப்பாற்றி வைத்திருப்பதே ரணில் தான்.

இந்த நிலையிலிருந்து நாடு மீள்வதென்றால் பல காரியங்கள் நடக்க வேண்டும். முதலில் பொருளாதார நெருக்கடி தீர வேண்டும். இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதற்கு அரசியலமைப்பில் மாற்றம் வேண்டும். அதற்கு மக்களின் மனதிலும் அரசியற் கட்சிகள் அரசியல்வாதிகளின் மனதிலும் மதவாதிகளின் தலைக்குள்ளும் மாற்றம் நிகழ வேண்டும். அதற்கு ஏற்ற மாதிரிப் பல தரப்பிலும் வேலைகள் நடக்க வேண்டும். சமாதானத்தின் மீதும் தீர்வின் மீதும் விருப்பமும் உறுதிப்பாடும் வேண்டும். ஜனநாயக ரீதியான மாண்புடைய தேர்தல் நடக்க வேண்டும். இப்படிப் பலவும் நடப்பது அவசியம். பொருளாதார நெருக்கடியை வைத்தே ரணில் தன்னைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்.

ரணிலை விட்டால் பொருளாதார நெருக்கடியைக் கையாளக் கூடிய வேறு ஆட்களில்லை என்றமாதிரியே நாட்டின் பெரும்பான்மையான சனங்கள் எண்ணுகிறார்கள். ஏன் அரசியற் கட்சிகள் பிற தலைவர்களுக்கும் கூட அப்படியான எண்ணம்தான். ஆனாலும் ரணில் விக்கிரசிங்கவை வீழ்த்தி விட வேண்டும் என்றே ஒவ்வொருவரும் யோசிக்கிறார்கள். இதற்காக அவர்கள் குறுக்கு வழியில் பயணிப்பதைப் போல தேர்தலை எதிர்பார்க்கிறார்கள். தேர்தல் நடந்தால் எல்லாம் சரியாகி விடும் என்று சிந்திக்கிறார்கள். இது தான் சிரிப்புக்கிடமான சங்கதி. ஒரு தேர்தல் அல்ல ஒன்பது தேர்தல் நடந்தாலும் பிரச்சினைகள் தீராது.

ஏனென்றால் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தேர்தல் மூலமாகத் தீர்வைக் காணவே முடியாது. தீர்வு காண வேண்டிய வேலைகளில் தேர்தல் மூலமான அதிகார மாற்றமும் ஒன்றாக இருக்கலாமே தவிர அது தான் தீர்வைப் பெற்றுத்தரும் என்று சொல்வதற்கில்லை. இதற்கு முன்பும் பல தேர்தல்கள் நடந்திருக்கின்றன. பல விதமான வாக்குறுதிகளின் மத்தியில் தான் அந்தத் தேர்தல்களும் அவற்றின் வெற்றியும் அமைந்தது.

மக்களும் பெரும் எதிர்பார்ப்புகளோடு தான் வாக்களித்திருக்கிறார்கள். ஆட்சி பீடம் ஏறியவர்கள் மாபெரும் பிரகடனங்களோடு கதிரையில் அமர்ந்தனர்.

இரண்டு மாதம் சென்றதும் பழையபடி வேதாளம் முருங்கையில் ஏறிய கதையே நிகழ்ந்தது. அதிகம் ஏன் யுத்தம் முடிந்த போது நாட்டிலுள்ள பெரும்பான்மையோரிடம் இனிப் பிரச்சினை இல்லை என்ற எண்ணமே மேலோங்கியிருந்தது.ஆனால் நடந்தது என்ன?

அதற்குப் பிறகு தான் ஆயிரத்தெட்டுப் பிரச்சினைகளும் பொருளாதார நெருக்கடியும் அந்நியத் தலையீடுகளின் அதிகரிப்பும். இன்று நாடு இருக்கின்ற நிலை?

தேர்தலினால் சிலவேளை ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்கலாம். நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது நடக்கும் என்றில்லை. அதற்கு ஏற்கனவே சொல்லப்பட்டதைப் போல பல காரியங்கள் நடக்க வேண்டும். அதற்கான திடசங்கற்பம் ஒவ்வொருவரிடமும் ஏற்பட வேண்டும். அதற்கு நாட்டையும் மக்களையும் நேசிக்கும் ஒரு பண்பு உருவாக வேண்டும். அரசியல் வணிகத்திலிருந்து கட்சிகளும் தலைவர்களும் அரசியல்வாதிகளும் ஊடகவியலாளரும் விடுபட வேண்டும். தனி நலனை விட பொது நலன் என்ற சிந்தனை எழ வேண்டும். தேசப்பற்றும் மக்களின் மீதான மதிப்பும் ஒரு அலை போல மேற்கிரள வேண்டும். இதை முன்னெடுக்கும் ஒரு அணி அல்லது தலைமை உருத்திரள வேண்டும்.

இப்போதிருப்பவை சவலைகள். இவற்றினால் எதையுமே செய்ய முடியாது. இதை அவை நன்றாக நிரூபித்துள்ளன. இவற்றை விட இருக்கின்ற One Man Army அல்லது One Man Government பரவாயில்லை. இதை நான் சொல்லவில்லை. சனங்கள் சொல்கிறார்கள்.

# மைக்கேல் ஜாக்சனுடன் பிளாக் ஆர் ஒயிட் பாடலில் ஆடிய இவர் யார் தெரியுமா? அவரின் தற்போதைய நிலை என்ன?

உலகம் முழுவதும் புகழ் பெற்ற நபர்களில் ஒருவர் மைக்கல் ஜாக்சன். இவரை தி கிங் ஆப் பாப் மூன் வாக்கர்



என்று ரசிகர்களால் பிரபலமாக அறியப் பட்டவர். பாடுவது என்பதை தாண்டி தனக்கான ஒரு தனி நடனத்தை உருவாக்கிக் கொண்டு உலகெங்கிலும் தனக்கான தனி அடையாளத்தை உருவாக்கியவர் மைக்கேல் ஜாக்சன்.

உலக மக்களை தன்னுடைய பாப் இசை ஆளும் நளினமான நடன அசைவுகளாலும் மயங்க வைத்த பாப் இசை பாடகர் மைக்கேல் ஜாக்சன். – விளம்பரம்– அதோடு குக்கிராமத்தில் கூட ஒரு சிறுவன் நன்றாக நடனம் ஆடினால் குட்டி மைக்கேல் ஜாக்ஸன் என்று தான் அழைப்பார்கள். அந்த அளவுக்கு அவரது புகழ் உலக முழுவதும் பரவியிருந்தது. இளம் வயதிலேயே இசையின் மீதும் நடனம் மீதும் அதிக நாட்டம் கொண்டிருந்தவர் ஜாக்சன். 11வது வயதிலேயே தன் சகோதரர்களுடன் இணைந்து 'தி ஜாக்சன் 5' என்ற இசை நிகழ்ச்சி மூலம் தன்னுடைய பாப் இசையை தொடங்கினார். –

மேலும் பாடல் எழுதுவது அதற்கு இசையமைப்பது பாடலுக்கு ஏற்றாற் போல் நடனம் ஆடுவது இடை இடையே கொஞ்சம் நவரச நடிப்பு என அனைத்து திறமையையும் கலந்து 'பாப்' என்ற புதிய உலகை மைக்கல் ஜாக்சன் படைத்தார். மக்களின் மத்தியில் 40 ஆண்டு காலமாக புகழ் பெற்றவராக வாழ்ந்து வந்தார் மைக்கல் ஜாக்சன். 2009 ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தனது வீட்டில் மாரடைப்பு காரணமாக மைக்கேல் ஜாக்சன் இறந்து விட்டார் என்று அறிவித்தார்கள்.


ஆனால் தற்போது வரை இவருடைய இறப்பு மர்மமாக இருக்கிறது. இவருடைய நடனத்திற்கு உலக அளவில் கோடிக்கணக்கான ரசிகர்கள் உள்ளார்கள். அவர் இல்லை என்றாலும் அவர் புகழ் இன்னும் மக்கள் மத்தியில் ஒலித்துக் கொண்டு தான் இருக்கிறது.

இந்த நிலையில் மைக்கேல் ஜாக்சன் உடன் தமிழ் பெண் ஒருவர் நடனமாடி இருக்கும் தகவல் தான் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. 1991ஆம் ஆண்டில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் மைக்கேல் ஜாக்சன் உடன் தமிழ் பெண் ஒருவர் நடனம் ஆடி இருக்கிறார். அவருடைய பெயர் யமுனா சங்கர சிவம்.



இவர் வட இலங்கை பகுதியில் பிறந்தவர். அங்கே தான் வளர்ந்தார். தன்னுடைய தொடக்கப்பள்ளி உயர்நிலைக் கல்வி அனைத்தையும் கொழும்புவில் படித்தார். பின் இவர் தன்னுடைய பல்கலைக்கழக படிப்பை அமெரிக்காவில் படித்தார். அங்கு இவர் படித்துக் கொண்டிருக்கும் போது தான் மைக்கேல் ஜாக்சன் மூலமாக ஒரு அரிய வாய்ப்பு வந்தது. அதாவது 1991 ஆம் ஆண்டில் பிளாக் அண்ட் வைட் என்ற நிகழ்ச்சியை நடத்த மைக்கேல் ஜாக்சன் திட்டம் போட்டார். இதில் நடிப்பதற்கும் நடனம் ஆடுவதற்கும் கலைஞர் தேவை என்று பத்திரிகையில் மைக்கல் ஜாக்சன் விளம்பரமும் செய்திருந்தார். இதைப் பார்த்த பல்லாயிரக்கணக்கான பேர் விண்ணப்பம் செய்திருந்தார்கள். இதில் 3000 பேர் நேர்முகத் தேர்வில் அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் தான் யமுனா.

பின் போட்டியில் யமுனா தேர்வு செய்யப்பட்டார். இவருடைய நாட்டிய நடினங்கள் பார்வையாளர்களை மட்டுமல்ல நடுவர்களையும் கவர்ந்திருந்தது. மேலும் இந்த நிகழ்ச்சியில் மைக்கேல் ஜாக்சன் உடன் யமுனாவும் ஒடிசி நடனம் ஆடி இருந்தார். இது தொடர்பான புகைப்படங்கள் தான் இணையத்தில் வைரலாகி வருகிறது. தற்போது யமுனாவுக்கு 55 வயது. வயது மூப்பின் காரணமாக இவர் நடனம் ஆடுவதிலிருந்து கொஞ்சம் பிரேக் எடுத்துக் கொண்டார்.


வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START


Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Glve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation



Over 20 Years Experience in the field of Insolvency

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# இலங்கைத்தீவின் பொருளாதார மீட்சியில் இந்தியாவின் கவனம் அதிகரிப்பு ஏன்?



கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



இந்தியா இலங்கைத்தீவில் நெருக்கமான உறவைக் கொண்டிருக்கும் காலங்கள் முழுவதும் இலங்கையின் நெருக்கடி காலமாகவே அமைந்திருக்கிறது. வரலாற்றுக் காலத்தை விட சுதந்திர இலங்கையின் காலம் முழுவதும் இந்தியாவே இலங்கையின் ஐக்கியத்தை, ஒருமைப்பாட்டை, இறைமையை பாதுகாத்துள்ளது.

அதில் போர்க்காலம் அல்லது ஆயுதக் கிளர்ச்சிகள் இலங்கையில் எழுச்சியடைந்திருந்த காலம் முழுவதும் இந்தியாவே இலங்கைக்கு அதிகம் உதவியுள்ளது. இடைப்பட்ட காலங்களில் இந்தியா இலங்கை ஆட்சியாளர்களின் நடைமுறைசார் அணுகுமுறையை தோற்கடிக்க எதிரிடையான நகர்வுகளையும் மேற்கொண்டுள்ளது.

ஆனால் போர்க் காலத்தில் எவ்வகையான மீளாய்வுகளை இலங்கை இராணுவத்துடன் மேற்கொண்டதோ அதேயளவான முக்கியத்துவத்துடன் தற்போதைய பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கான திட்டங்களை மீளாய்வு செய்வதில் கவனம் கொள்கிறது. இவ்வாறு இந்தியா இலங்கைத் தீவுக்கும் அதீதமான முக்கியத்துவத்தை கொண்டிருக்க முயல்வதை விளங்கிக் கொள்ள வேண்டிய தேவை தவிர்க்க முடியாததாகும்.

29.03.2024 புதுடில்லியில் இலங்கை இந்திய தரப்புகளுக்கிடையே இருதரப்பு பொருளாதாரத் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இதில் இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் குவாத்ராவின் அழைப்பில் இலங்கையின் தேசிய பாதுகாப்பு பொறுத்து ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழு பிரதானியுமான ராகல ரத்நாயக்க உட்பட்ட இலங்கையின் உயர்மட்டக் குழுவினர் கலந்து கொண்டனர்.

இதன்போது வினய் குவாத்ரா இலங்கையின் பொருளாதார வளர்ச்சி சாதகமான நிலைக்குத் திரும்பியுள்ளதால் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மூலோபாய பொருளாதார வேலைத் திட்டத்தின் கீழ் இணக்கம் எட்டப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் இயலுமை இரு நாடுகளுக்கும் உள்ளதென தெரிவித்தார், அதன் போது சாகல ரத்நாயக்க சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தில் இலங்கையின் முன்னேற்றம் குறித்து விளக்கியதுடன், இலங்கையின் பொருளாதாரத்தை முன்னேற்ற இந்தியாவுடன் ஒத்துழைப்பை பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இக்கலந்துரையாடலின் போது இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்புத் திட்டங்களை கவனம் செலுத்துவதுடன், ஒவ்வொரு காலாண்டிலும் அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டது. இந்தியா போர்க் காலத்திலும் கடற்படை, விமானப்படை மற்றும் ஆயுத தளபாடங்கள் குறித்தும் தாக்குதல் திட்டங்கள் குறித்தும் செயற்கைக்கோள்கள் மூலம் இலங்கை அரசாங்கத்தின் படைகளுக்கு உதவியதாக விமர்சனங்கள் தமிழகத்திலும் ஈழத்தமிழர் மத்தியிலும் உண்டு.

அது மட்டுமல்லாது அக்காலப்பகுதியிலும் அதன் பின்பும் பல ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் இந்திய இலங்கை போர் ஒத்துழைப்பு பற்றி வெளிவந்துள்ளது. இந்தியாவின் ஒத்துழைப்பு இலங்கையில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வர உதவியுள்ளதாகவே விமர்சனங்கள் அமைந்திருந்தன. அதற்கான ஆதாரங்களும் இல்லாமலில்லை. அதனை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு மட்டுமல்லாது இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், வெளிப்படையாகவே தெரிவித்திருந்தமை நினைவு கொள்ளத்தக்கது.

அதாவது விடுதலைப் புலிகளுடனான போரின் வெற்றிக்கு இந்தியாவின் பங்களிப்பு அதிகமானது என்று குறிப்பிட்டார். அதனை ஆளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் அப்போது பாராளுமன்றத்தில் தெரிவித்தனர். இந்தியா தற்போது போர் வெற்றிக்கான உத்தியை எப்படி இலங்கைத் தீவில் திட்டமிட்டு ஒத்துழைப்பு வழங்கியதோ அவ்வாறே பொருளாதாரத்திலும் ஈடுபாடுகாட்ட ஆரம்பித்துள்ளது. ஏன் இலங்கைத் தீவின் பொருளாதாரத்தை பயப்படுத்த வேண்டும் என இந்தியா கருதுகிறது என்பது பிரதான கேள்வியாகும்.

தென்னிலங்கைக்கு இருக்கும் தேவைகளைக் கடந்து இந்தியாவுக்கு இலங்கைத் தீவின் பொருளாதார பாதுகாப்பு ஏன் முக்கியமானது? அதனை விரிவாக விளங்கிக் கொள்வது அவசியமானது.

முதலாவது. இலங்கை மீதான சர்வதேச சக்திகளது தலையீடு பொருளாதாரம் சார்ந்ததாகவே அதிகம் அமைந்துள்ளது, குறிப்பாக அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய யூனியன் போன்ற நாடுகள் இலங்கையின் பொருளாதார பலவீனத்தை கருத்தில் கொண்டே தலையீட்டை மேற்கொள்கின்றன.

ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் மீதான தலையீடு வளர்ச்சியடைவதற்கு ஏனைய நாடுகளின் அணுகுமுறையே அடிப்படைக் காரணமாகும். இந்தியா, ஜப்பான் மற்றும் நோர்வே போன்ற நாடுகளிடமே இலங்கை முதலில் ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்திற்கான நகலை வழங்கியது, அனைத்து நாடுகளும் அதில் கவனம் கொள்ளத் தவறியதன் விளைவாகவே சீனாவின் திட்டமாக மாறியதுடன், அதுவே 99 வருட குத்தகைக்கானதாக மாறியுள்ளது. இத்திட்டத்தை இந்தியா மேற்கொள்ள முனைந்திருந்தால் நடைமுறையில் சீனாவின் தலையீடு பிராந்தியத்தில் அர்த்தமானதாக அமைந்திருக்க வாய்ப்பில்லை. குறைந்தபட்சம் இலங்கைத் தீவினதும் சீனாவின் தலையீட்டை தவிர்க்க முனைந்திருக்கலாம்.

அதற்கான வாய்ப்பினை இந்திய கொள்கை வகுப்பாளர்கள் தவற விட்டார்கள் என்பதற்கு அப்பால் இந்தியாவின் அன்றைய பொருளாதார நிலையும் ஒரு காரணமாக அமைந்திருந்தது. ஆனாலும் அதனை தக்கவைத்திருக்க வாய்ப்பிருந்தது. இந்திய ஆட்சியாளரும் கொள்கை வகுப்பாளர்களும் பிராந்தியத்தின் தூர நோக்காக அதனை கருத்தில் கொள்ளவில்லை. இந்தியாவின் பிராந்திய சர்வதேச அதிகார மையமாக இந்து சமுத்திரம் காணப்பட்ட போதும் அதன் மீதான இந்திய அணுகுமுறை தோல்விகரமானதாகவே உள்ளது.

அதாவது இந்தியா சமுத்திர அரசியலில் (Oceanic Politics) தோல்வியையே எதிர்கொண்டுள்ளது. இந்தியாவை மீறி சீனாவும் அமெரிக்காவும் இந்து சமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இவ்வகை செல்வாக்கு வளர்ச்சியடைய இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையே காரணமெனக் கருதும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ர்சி அதற்கான வாய்ப்பினை தற்போது அதிகரிக்கரித்துள்ளது. இதனால் இந்தியா அதிகம் இலங்கையை தனது பொருளாதார வலயத்திற்குள் இணைக்க முயல்கிறது. அதன் ஓரங்கமாகவே எட்கா உடன்படிக்கை திட்டமிடப்படுகிறது.

இரண்டாவது, இந்தியாவின் அயல் நாடுகள் பொறுத்து வரையறுக்கப்பட்ட சகார் திட்டத்தில் மாலைதீவு, பாகிஸ்தான் மற்றும் நேபாளம் போன்ற நாடுகள் அதிக நெருக்கடியை இந்தியாவுக்கு ஏற்படுத்தியுள்ளன. அதனால் மட்டுமன்றி இலங்கையின் முக்கியத்துவம் கருதி அத்தகைய நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் இந்தியா அக்கறையோடு செயல்படுகின்றது.

இலங்கையை இழந்து விடக்கூடாது என்பதில் அதிக விட்டுக் கொடுப்புகளை மேற் கொண்டு வரும் நிலையிலேயே பொருளாதாரத்தை வாய்ப்பான விடயமாக கருதுகிறது. தொடர்ச்சியாக மீளாய்வுகளை மேற்கொள்வதன் மூலம் பிற சக்திகளின் நகர்வுகளையும் திட்டங்களையும் இலகுவில் கண்காணிக்க முடியுமென இந்தியா கருதுகிறது.

இதன் வாயிலாக இலங்கைத் தீவை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியுயென இந்தியா கணிப்பிடுகிறது. இலங்கைத் தீவின் வடக்குடனான இணைப்பினை (Connectivity) அதிக பொருளாதார குறிகாட்டிக் கூடாக நகர்ந்த முனைகிறது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை விடுத்து பொருளாதார விருத்திக்கூடாக மக்களின் எண்ணங்களை மாற்ற முடியுமென இலங்கை அரசு மட்டுமல்ல இந்தியாவும் கருதுகிறது. அதனையே அதிகமாக கருத்தில் கொண்டு வடக்கு, கிழக்கை இந்தியாவுடன் பொருளாதாரமாக இணைப்பதில் கவனம் கொள்கிறது.

இந்தியாவின் பித்தியதும் நிலையானதுமாக அமையக்கூடியது இராமர் பாலம். இந்திய-ஈழத்தமிழர் உறவுடன் பிணைப்பினைக் கொள்வதில் உள்ள நெருக்கத்தை விட இலங்கைத் தீவுடனான உறவாகவே இணைப்பினை இருதரப்பும் கருதுகிறது. இராமர் பாலம் முதல் மன்னார் தீவிலிருந்து திருகோணமலைக்கும் கொழும்புக்குமான இணைப்பினை சம தளத்தில் ஏற்படுத்தும் திட்டத்தை இரு அரசுகளும் உரையாடி வருகின்றன.

மூன்றாவது, இலங்கை உள்நாட்டு அரசியலின் விடயங்களில் இந்தியாவின் தலையீட்டை அதிகப்படுத்துவதற்கு பொருளாதாரத்தை குறி காட்டியாகக் கொள்கிறது. அரசியலும் பொருளாதாரமும் தனித் தனியானது அல்ல. அவை இரண்டும் ஒரே தளத்தில் இயங்கும் வலுவான தேச நிர்மாண சக்திகள். அரசியல், பொருளாதாரம் தற்போது அரசியற் பொருளாதாரமாகவே இயங்குகிறது. இலங்கைத் தீவின் அரசியற் பொருளாதாரம் இந்தியத் தரப்பின் இருப்புக்குள் அகப்பட்டுள்ளதாகவே தெரிகிறது.

ஈழத்தமிழர் அரசியலில் மட்டுமல்ல தென்னிலங்கையின் ஆட்சியாளர்களை மாற்றியமைப்பதிலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலிலும் இந்தியாவின் பங்கிகையும் கருத்தில் கொள்ளும் போதே இந்தியாவின் நிலைப்பாடு உணர முடிகிறது. இலங்கைத்தீவு முழுவதும் இந்தியாவின் செல்வாக்கு நீக்கமற நிறைந்துள்ளதாகவே தெரிகிறது. எனவே இந்தியாவின் பொருளாதார ஒத்துழைப்பின் மூலம் இலங்கைத் தீவை இந்தியா தனது நேரடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவே தெரிகிறது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதுடன், இலங்கைத் தீவின் புவிசார் பொருளாதாரம் மேலும் விருத்தியடைய வாய்ப்பு கிடைத்துள்ளது. இது இலங்கைத்தீவின் அரசியற் பொருளாதாரத்தில் இந்தியாவின் தலையீட்டை வலுப்படுத்தும் என்ற எதிர்பார்க்கை இந்தியத் தரப்பிடம் உண்டு. போரை எப்படி இந்தியாவும் சீனாவும் அமெரிக்காவும் இணைந்து வெற்றி கொள்ள உதவினதோ அவ்வாறே பொருளாதாரத்தையும் வெற்றி கொள்ள இலங்கை ஆட்சியாளர்கள் திட்டமிடுகின்றனர்.

ஆனால் போரின் இறுதி வெற்றியை அடுத்து அதன் விளைவுகளை அதிகம் தனதாக்கிக் கொண்டது சீனா என்பதை புரிந்து கொள்ளுதல் வேண்டும். அவ்வகையான நிலையை நோக்கியே இலங்கைத் தீவு நகர வாய்ப்புள்ளது. அதன் அணுகுமுறையும் கடந்த கால அனுபவமும் அதுவாகவே தெரிகிறது. ஆனால் தற்போதுள்ள பலம் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கான பாய்ச்சல் மட்டுமேயாகும். அதனை பிராந்திய சர்வதேச தளத்தில் விருத்தி செய்ய தவறும் பட்சத்தில் அமெரிக்கா சீனாவினால் இலங்கைத்தீவு இந்தியாவிடமிருந்து மீட்கப்படும். அதனையே தென்னிலங்கையின் தீவிர தேசிய சக்திகள் திட்டமிடுகின்றன. இந்தியாவின் பொருளாதார ஒத்துழைப்பினால் ஈழத் தமிழருக்கு ஏதும் சாத்தியமான வழிமுறை ஏற்படும் எனக் கருதுவது பல வீனமான அறிவியலின் தொகுப்பாகும்.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

மேடராசி அன்பர்களே1 சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங் களில் வேகம் பிறக்கும். வீடு, வாகனம் மூலம் செலவுகள் ஏற்படலாம். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரத்தில் புத்தி சாதூரியத்தால் முன் னேற்றம் காண்பீர்கள். உத்யோகத்தில் நிர்ப்பந்தமாக இடமாற்றம் அல்லது பணிமாற்றம் இருக்கலாம். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் குறையும்.

ரிஷபராசி அன்பர்களே! எந்த காரியத்திலும் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். வீண் பிரச்னைகள் அகலும். நண்பர் கள் உறவினர்களுடன் நீடித்து வந்த மன வருத்தம் நீங்கும். பயணங்கள் செல்ல நேரிடும். கூட்டு தொழில் அல்லது வியா பாரம் செய்பவர்கள் கவனமாக இருப் பது நல்லது. உத்யோகத்தில் வீண் அலைச்சல் உண்டாகும். வேலைப் பளு கூடும். குடும்பத்தில் அடுத்தவர்களால் ஏதேனும் குழப்பம் உண்டாகலாம்.

மிதுனராசி அன்பர்களே! பொருள் வரத்து அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்று வீர்கள். நண்பர்கள் மூலம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் அனுகூலமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் இருந்த சண் டைகள் நீங்கும். கணவன், மனைவிக் கிடையே இருந்த இடைவெளி குறையும்.

கடகராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும். தேவையான நேரத் தில் மற்றவர்களின் உதவி கிடை க்கும். புதிய சொத்து வாங்குவ தில் கவனம் செல்லும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரி கள் சொல்வதை செய்வதன் மூலம் நன்மை கிடைக்க பெறுவர். குடும்பத்தில் அமைதி ஏற்படும்.

சிம்மராசஜ அன்பர்களே! காரிய ங்களில் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். புதிய வீடு வாகன சேர்க்கை உண்டாகும். மனதில் இருந்த குழப்பங்களுக்கு விடை கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், வேலை பளுவும் ஏற்படலாம். வார்த்தை களில் நிதானம் அவசியம்.

கன்னிராசி அன்பர்களே! எல்லா காரியங்களிலும் அதிக முயற்சி மூலம் வெற்றி கிடைக்கும். கடன் பிரச்னை தீரும். தகராறு, வழக்குகளில் சாதகமான போக்கு காண ப்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். கவுரவம் அதிகரிக்கும். மறைமுக நோய் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூ லாகும். உத்யோகத்தில் வேலைப் பளு குறையும். முயற்சிகள் காலதாமதமாக பலன் கொடுக்கும்.

துலாம்ராசஜ அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். வாகனங் கள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. சிலருக்கு இட மாற்றம் உண்டாகலாம். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை நீங்கும். உங்களது பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை. உத்யோகத்தில் அடுத்த வரை நம்பி பொறுப்புக்களை ஒப்படை ப்பதை தவிர்ப்பது நல்லது. பெண்கள் அடுத்தவருக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை.

விருச்சிகராசி அன்பர்களே! எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் அதிகமாகும். புதிய நண்பர்கள் கிடைப்பது டன் அவர்களால் நன்மையும் உண்டா கும். மரியாதை கூடும். தன்னம்பிக்கை யுடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியா பாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். தேவையான பண உதவியும் கிடைக்கும். கடன் தொல்லை குறையும். தொழில் போட்டிகள் நீங்கும். உததியோகத்தில் எதிர் பார்த்த பதவி உயர்வு கிடைக்கும்.



தனுசராசி அன்பர்களே! எடுக் கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். தடைகள் அனைத்தையும் தகர்ப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் இருந்த மந்த நிலை மாறும். பணவரவு நிதானமாக இருக்கும். மற்றவர்கள் உங்கள் மேல் கொண்டிருந்த கோபம் அகலும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். புதிய தொழில் ஆரம்பிக்க வேண்டிய சூழ் நிலை ஏற்படும். உத்யோகத்தில் இருப்ப வர்கள் நிதானம் தேவை.

மகரராசி அன்பர்களே! தேவை யற்ற வீண் படபடப்பு ஏற் படும். நீண்ட நாட்களாக வாங்க வேண்டும் என்று எண்ணியபொருட்களை வாங் குவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பாக இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்ட மிட்டு காரியங்களை செய்து எதிர்பார்த்த வெற்றியை அடைவர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன், மனைவிக் கிடையில் நெருக்கம் உண்டாகும்.

கும்பராசி அன்பர்களே! வீண் மனக்கவலைகள் நீங்கும். கனவு தொல்லைகள் உண்டாகும். பணவரத்து திருப்தி தரும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். ஆடம்பர செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழிலை விரிவுபடுத்துவதற்கான செய லில் ஈடுபடுவீர்கள். உத்யோகத்தில் இருப் பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும்.

மீனராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளும், காரியங்களும் சாதகமான பலன் தரும். மன தில் இருந்த தயக்கம், பயம் நீங்கும். வெளியூர், வெளிநாடு பயணங்கள் செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். தொழில் வியாபாரம் முன்னேற்ற மடையும். லாபம் அதிகரிக்கும். உத்தி யோகத்தில் பதவி உயர்வும் கூடுதல் பொறுப்புகளும் கிடைக்கும். வர வேண் டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## தமிழரின் வாக்குகளைக் கோருபவர்கள்

(9ம் பக்கத் தொடர்ச்சி) இணைந்த மாகாண சபைக்கு வழிவகுத்தது. கிழக்கில் நடத்தப்படும் சர்வஜன வாக் கெடுப்பின் மூலமே இதனை நிரந்தர மாக்குவதா இல்லையா என்பது முடிவெடுக்கப்படுமென தெரிவிக்கப் பட்டது. ஆனால், முதலாவது தேர்தலு க்குப் பிறகு இணைந்த மாகாண சபைக்கு தேர்தல் இடம் பெறவில்லை. சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வில்லை.

இன்று தமிழர் பிரச்சனை பற்றி குரல் கொடுக்கும் ஜே.வி.பி. தரப்பினர் மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக வழக் குத் தொடுத்து அதன் இணைப்பை நீதிமன்றத் தீர்ப்பினூடாக ரத்துச் செய்வித்தனர்.

கனடாவில் இடம் பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் அனுர குமாரவின் சிங்கள உரையை புரிந்து கொள்ளாத தமிழர் ஒருவர் மொழிபெயர்ப்புக் கேட்ட போது, மேடையிலிருந்த பிரமுகர் ஒருவர் எலியட்ட தாண்ட (வெளியே போ) என்று குரல் கொடுத்தது அனுர குமாரவுக்கு தெரியாததல்ல. நல்ல வேளை மொழி பெயர்ப்புக் கேட்ட தமிழருக்கு சிங்களம் புரியாததால் பிரச்சனையின்றி கூட்டம் தொடர்ந் தது.

1987 – 1989 காலத்தில் இலங்கை–இந் திய ஒப்பந்தத்தை எதிர்த்து தமிழர் மீது கட்டவிழ்த்து விட்ட வன்செயல் களுக்கும், 1987 ஜே.ஆர்.–ராஜிவ் ஒப்பந்தம் வழிவகுத்த வடக்கு கிழக்கு இணைப்பை நீதிமன்றம் ஊடாக ரத்தாக்கியதற்கும் இதுவரை ஜே.வி.பி. ஒருபோதும் மன்னிப்புக் கேட்ட தில்லை.

ஜனாதிபதி தேர்தலை சந்திக்கும் வேளையில் தமிழரின் வாக்குகளுக்கு கோரிக்கை விடும்போது முதலில் தங்களின் தவறுகளுக்காக மன்னிப்பு கேட்க வேண்டியது கட்டாயமான கட்டாயம். தமிழர்களின் மறதியை சாதகமாக்கி வாக்குகளைச் சுருட்ட முனைவது ஏற்புடையதன்று. மன்னிப் பைக் கேட்டு விட்டு வாக்குகளைக் கேட்க வேண்டும். அதன் பின்னர் தமிழர் சுயாதீனமாக தங்கள் முடிவை எடுக்க அனுமதிக்க வேண்டும். அதுவே ஜனநாயகம்.

## தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக...

(15ம் பக்கத் தொடர்ச்சி) அரவணை க்கிறது என்று பொருள். எதுவாயினும், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரையிலும் இந்தியா தனக்கு நெருக்கடிகளைத் தரக் கூடாது என்று ரணில் கருதுவதால், அவர் இந்தியாவை எப்படியும் சுதா கரிக்கத் தான் முயற்சிப்பார்.

இவ்வாறாக தென்னிலங்கையில் ஜனாதி பதித் தேர்தலை நோக்கி கட்சிகள் வியூக ங்களை அமைத்து உழைத்து வரு கின்றன. தமிழ்த் தரப்பிலோ பிரதான கட்சி நீதிமன்றத்தில் இருந்து வீட்டுக்கு வர முடியாமல் திணறிக் கொண்டிருக் கிறது. ஒரு கட்சி புறக்கணிப்பு என்று சொல்லிவிட்டு ஒதுங்கி விட்டது.தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் கட்சிகள் கருத்துருவாக்கம் என்ற கட்டத்தைத் கடந்து அதற்கான கட்ட மைப்பு சார்ந்த நடவடிக்கைகளில் இன்னமும் இறங்கவில்லை. தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டது போல தமிழ் ஐக்கியந் தான். கடந்த 15 ஆண்டு களாக முடியாமல் போன காரியம் அது. கடந்த மாதம் தமிழக முதல்வருக்கு அனுப்பப்பட்ட கூட்டுக் கடிதத்தைப் போல அரிதாக ஏதாவது நடக்கும். மற்றும் படி கடந்த 15 ஆண்டுகளாக தமிழ்மக்களை ஒரு தேசமாகத் திரட்டு வதில் எல்லாக் கட்சிகளுமே தோல்வி யடைந்து விட்டன. இந்த லட்சண த்தில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நோக்கி இதே கட்சிகளை எப்படி ஒருங்கிணைப்பது? அல்லது கட்சி களைக் கடந்து மக்கள் அமைப்புகள் அதை முன்னெடுக்க வேண்டுமா?

## மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிராகரிக்க

(08ம் பக்கத் தொடர்ச்சி) விட்டு அதில் தங்களின் சுயலாபங்களை நிறைவேற்றிக் கொள்ளும் மிக மோசமான நடவடிக்கைகளை மக்களோடு நின்று சமத்துவக் கட்சியும் வன்மையாக கண்டிக்கிறது. மேலும், பொன்னாவெளி மக்களோடு நாம் தொடர்ந்தும் நிற்போம். அவர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப் படும் வரை குரல் கொடுப்போம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தோம்!



(24ம் பக்கத் தொடர்ச்சி) என்பதை மிக விரைவில் தெரியப்படுத்துவோம். தற்போது அது தொடர்பில் சிவில் அமைப்புக்கள் உள்ளிட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி வருகிறோம். அடுத்து தமிழ் கட்சிகளோடு பேசவுள்ளோம். தமிழ் மக்கள் யாரை ஆதரிக்க வேண்டும் என்பது, அவர்களுடைய சுய விருப்பம். ஆனால் பொதுவான நிலைப்பாடு மாற்றம் வேண்டும் என்ற நிலைமையே தற்போது காணப்படுகின்றது. இந்த நிலையில் தமிழ் பொது வேட்பாளர் பேசுவது மீண்டும் நீலம் , பச்சையைத் தான் வீடு கொள்ள வைக்கும். ஆகவே தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்படுவார்கள் என நம்புகிறோம் என்றார்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கலந்து கொண்டமை தொடர்பில் கேட்ட போது எமது மாநாட்டிற்குக் கட்சி பேதமின்றி கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தோம். யாருக்கும் தனிப்பட்ட அழை ப்பு விடுக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மாத்திரம் மாநாட்டிற்கு வருகை தந்தார். வந்தவரை நாம் வரவேற் றோம் எனத் தெரிவித்தார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),**
**Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# இலங்கைத் தமிழர்களை இந்திய குடியுரிமைச் சட்டத்தின் கீழ் கொண்டு வர முடியாது என்கிறார் அமைச்சர் ஜெய்சங்கர்

இலங்கையில் உள்ள தமிழர்கள் இந்திய குடியுரிமை திருத்தச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்று சொல்வது நியாயமான வாதம் அல்ல என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்று வழங்கிய செவ்வியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் உள்ள தமிழர்கள் ஏன் இந்திய குடியுரிமை திருத்தச் சட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்பதற்கு நேரடியான பதிலை வழங்கிய ஜெய்சங்கர், அது முடியாத விடயம் என்று கூறினார். இலங்கையில் தமிழர்களுக்கு என்ன நடக்கிறது என்பதை பாகிஸ்தானில் உள்ள இந்துக்களுடன் ஒப்பிடமுடியாது.



இலங்கையில் உள்ள தமிழர்கள் விடயத்தை எடுத்துக் கொண்டால், இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட்டுள்ளன. எனவே பாகிஸ்தானின் நிலைமையை இலங்கையின் நிலைமையுடன் ஒப்பிட முடியாது. இவை முற்றிலும் வெவ்வேறு விடயங்களாகும். இந்திய குடியுரிமை திருத்தச்சட்டம் என்பது வரலாற்றின் தவறான பக்கத்தில் இருப்பவர்களுக்கு நீதி வழங்குவதாகும் என்று ஜெய்சங்கர் குறிப்பிட்டார். இதன் போது தமிழ் இந்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்களே என்று ஊடகவியலாளர் கேட்ட போது இலங்கை தமிழர்கள், இந்திய குடியுரிமை சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்பது சரியான கூற்று அல்ல என்றும் அவர் பதிலளித்துள்ளார்.

இதேவேளை கச்சதீவை இலங்கைக்கு திமுகவும் காங்கிரஸ் கட்சியும் தாரை வார்த்தன. தமிழக மீனவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்படும் போது காங்கிரஸ் திமுக கண்ணீர் வடிக்கிறது. தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 5 மீனவர்களை இலங்கையில் இருந்து பாஜக மீட்டு கொண்டு வந்தது. என இந்திய பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்துள்ளா

திமுக மட்டுமல்ல இந்தியா கூட்டணியே பெண்களுக்கு எதிரானது என பிரதமர் நரேந்திர மோடி வேலூரில் நடை பெற்ற பரப்புரை கூட்டத்தில் தெரிவித்தார். மக்களவைத் தேர்தலை முன்னிட்டு தமிழ்நாட்டில் பாஜக கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்வதற்காக பிரதமர் மோடி சென்னைக்கு சென்றிருந்தார்.

# கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தோம்! சுமந்திரன் வந்தார்! வரவேற்றோம்!

தமிழர்களின் தேசிய பிரச்சனைகள் தொடர்பில் தமிழ் அரசியல் தலைவர்களை விட எமக்குக் கரிசனை அதிகம். தமிழ் மக்களின் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் திடமாக உள்ளோம் எனத் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். யாழ். ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழர்களின் தேசிய பிரச்சனை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சிறிதரன் சம்பந்தன் உள்ளிட்ட தமிழ் அரசியல் தலைவர்களை விட எமக்குக் கரிசனை உண்டு. தமிழ் மக்களின் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் திடமாக உள்ளோம்.

தமிழ் மக்களின் பிரச்சனையை இனம் கண்டுள்ளோம். அதற்கான தீர்வினை பரிந்துரை செய்யவுள்ளோம். தீர்வு என்ன (22ம் பக்கம் பார்க்க)

